Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–30 | 14 –08–2004 | சனிக்கிழமை | ஓசை –178




# எதிர்க்கட்சித் தலைவர் ரணிலை சந்தித்துப்பேச சந்திரிகா அழைப்பு!

## பணிக்குத் திரும்பினர்

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தின் கல்வி சாரா ஊழியர்கள் நேற்று முன் தினம் பணிக்குத் திரும்பினார்கள்.

கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற பேச்சுவார்த்தைக்கு அமைவாக தாம் இந்தப் பணிக்கு திரும்புவதாகவும் எனினும் தமது கோரிக்கைகள் அடங்கிய கடிதம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு முக்கிய விடயமாகப் பிரஸ்தாபிப்பு

(கொழும்பு)

**எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசவருமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைப்பு விடுத்துள்ளதாகவும் தற்பொழுது இந்தோனேசியாவிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் இச்சந்திப்பு இடம்பெறலாம் எனவும் இணைய தளச்செய்தி யொன்று தெரிவிக்கின்றது.**

சனாதிபதி சந்திரிகா விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சு வார்த்தைகள் தொடர்பாக எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரம சிங்கவைச் சந்தித்துப் பேசுவார் என எதிர்பார்க்கப்பட்ட வேளை யில் இவ் அழைப்பு விடுக்கப்பட்டி ருப்பதும் இவ் அழைப்பானது சமா தானப் பேச்சுவார்த்தைகள் தொடர் பாக அல்ல எனவும் சனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது தொடர் பாகப் பேச்சுவார்த்தை நடாத்தும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் புதையல் எடுக்க சிறுமியைப் பலியிட முயற்சி

### -கடத்த முயன்ற இருவர் கைது

வவுனியா சிதம்பரபுரம் பகுதி யில் சிறுமி ஒருத்தியைக் கடத்திப் பலிகொடுக்க முயற்சி ஒன்று இடம் பெற்றுள்ளது. சிதம்பரபுரம் பகுதி யில் உள்ள புதையல் ஒன் றினை எடுப்பதற்காக சிலநபர்கள் இணைந்து நேற்று முன்தினம் இரவு ஒருவரைக் கடத்தி பலி கொடுத்து புதையல் எடுப்பதற் காக தயாராகியுள்ளனர்.

இதன்போது வீட்டில் இருந்த வர்கள் கூச்சலிட்டுக் கடத்திச் செல்ல வந்தவர்களைப் பிடித்துள் ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு நபர்களைத் தாம் கைது செய்து விசாரணை செய்து வரு வதாக பொலிசார் தெரிவித்தனர்

வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குகணேஷ்வரன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### -யாழ்.மந்திகைப்பகுதியில்

## மரணவீட்டிற்கு சென்று திரும்பியவர் வீதி விபத்தில் மரணம்

யாழ். பருத்தித்துறை வீதியின் மந்திகைப்பகுதியில் நேற்று நண் பகல் இடம்பெற்ற வீதிவிபத்தில் சிக்கிப் பொதுமகன் ஒருவர் உயி ரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் காட்டுப்புலம், கரவெட்டியைச்சேர்ந்த செல்லத் தம்பி செல்வம் (வயது 45) என அடையாளங் காணப்பட்டுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிரான் பகுதியில் இருவர் துப்பாக்கிச் சூட்டில் பலி

கிரான் பகுதியில் நேற்று முன் தினம் இனந்தெரியாதோர் மேற் கொண்டதுப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி இரண்டுபேர் உயிரிழந் துள்ளனர். இச்சடலங்கள் இது வரை அடையாளம் காணப்படாத நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட் டுள்ளது. இச்சம்பவம் தொடர்


(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஒலிம்பிக் போட்டிகள் நள்ளிரவு கோலாகல ஆரம்பம்

மிகப் பழமைவாய்ந்த ஒலிம்பிக் போட்டியின் ஆரம்ப நிகழ்வு ஒலிம் பிக்கின் தாயகமான கிரேக்கத்தின் எதென்ஸ் நகரில் நேற்றுநள்ளிரவு 11 மணிக்கு வண்ணமயமாக ஆரம்பமாகியது.

முன்னதாக அந் நாட்டு பாரம் பரிய கலைகளுடன் நிகழ்வு ஆரம்ப மாகி முதலாவது ஒலிம்பிக் போட் டியை சித்தரிக்கும் காட்சிகள் காண்பிக்கப்பட்டது.

தொடர்ந்து 202 நாடுகளைச் சேர்ந்த வீரவீராங்கனைகள் தங்க ளது நாடுகளை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் மைதானத்தை வலம்வந்தனர். இது ஒலிம்பிக்கின் 28ஆவது போட்டியாகும்.



## பாராளு.அமர்வுகளைப் பகிஷ்கரிக்க ஐக்கிய தேசியக்கட்சி ஆலோசனை

ஐக்கிய தேசியக் கட்சி அடுத்த வாரம் நடைபெறவுள்ள பாராளுமன்ற அமர்வு களைப் பகிஷ்கரிக்கலாம் என எதிர்பார்க் கப்படுகிறது. நேற்று முன்தினம் நடை பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஆளும் கட்சியின் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பி னர்களான கருஜெயசூரிய மற்றும் ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோருக்கும் இடை யில் ஏற்பட்ட கருத்து மோதலே இந்த எதிர்ப்பு நடவடிக்கைக்கு காரணமாகும். தேர்தலின் போது அடையாள அட்டையை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொருட்களுக்கான மானியம் நீக்கம்; விலை அதிகரிப்பு ஏற்படும்

### நிதியமைச்சர் சரத்அமுனுகம கூறுகிறார்.

அரசாங்கம் சீனி, மிளகாய், வெங் காயம், கிழங்கு போன்ற பொருட்களுக்கு மானியங்களை நீக்கவுள்ளமையால் பொருட்களின் விலை அதிகரிக்கப்படுமென நிதியமைச்சர் சரத்அமுனுகம தெரிவித்துள் ளார்..

நாட்டில் அதிகமான பொருட்களுக்கு மானியங்கள் வழங்கப்படுவதாகவும் இதனை நீக்கி அந்நிதி பிரதேச அபிவிருத் திக்கு விளைத்திறன் உள்ள முதலீடாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புளியங்குளம் பகுதியில் காவல்துறையால் கைதான தப்பிஓடிய சிப்பாய் விடுவிப்பு




புளியங்குளத்தில் கடந்த 19ஆம் திகதி கைது செய்யப்பட்டுத் தமிழீழ காவல்துறையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இராணுவத்திலிருந்து தப்பி யோடிய இராணுவ வீரர் நேற்று சர்வதேச செஞ் சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் முன்னிலையில் வடக்கு கிழக்கு மனித உரிமை செயலகத்தின் பணிப் பாளர் அருட்திரு.கருணாரட்ணத்தினூடாக அவரின் தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வரக்கா பொல கேகாலையைச் சேர்ந்த கெட்டி யாராச்சி சாலித்த பிரதீப்குமார (வயது 28) என்ற மேற்படி சிப்பாய் தனது தாயாருடன் சர்வதேச செஞ் சிலுவைச் சங்கத்தின் வாகனத்தில் வவுனியாவுக்குச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ம.உ.க.சிறுவர்கள் உரிமைக்கான பணிப்பாளர் வடகிழக்கு ம.உ.செ.பணிப்பாளர் சந்திப்பு

### சிறுவர்களின் கல்வி உரிமை பற்றி ஆராய்வு

மனித உரிமை கண்காணிப்புக்குழுவின் சிறுவர்கள் உரிமைக்கான பணிப்பாளர் யோ.பெக்கர் வடக்கு கிழக்கு மாகாண மனிதஉரிமைகள் செயலகத்தின் பணிப்பாளர் அருட் திரு. கருணாரட்ணம் ஆகியோர் நேற்றுச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் வடக்கு கிழக்கு மக்களால் முகம்கொடுக்கப்படும் மனிதஉரிமைகள் தொடர்பான பல்வேறுபட்ட பிரச்சினைகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. இக்கலந்துரையாடலில் விசேடமாக கல்விக்கான சிறுவர்களின் உரிமைபற்றியும் 17 வயதுக்கு கீழ்ப்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும்பாடசாலைகளுக்கு வசதிவாய்ப்புக்கள்,ஆசிரியர்கள் நியமனம் ஆகியவற்றில் அரசுகாட்டும் அசமந்தப்போக்குப்பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது.

# கனகராயன்குளம் ம.வி.யில் 73வீத மாணவர்கள் சித்தி

(அலுவலக செய்தியாளர்)

கடந்தவாரம் வெளியிடப்பட்ட க.பொ.த.உயர்தரப்பரீட்சை பெறுபேறுகளின்படி வவுனியா வடக்கில் கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் 73வீதம் மாணவர்கள் கலைப்பிரில் சித்தி யடைந்துள்ளதுடன்,இதன்படி கனக ராயன்குளம் மகாவித்தியா லயத்தின் பெறுபேறுகள் பின்வரு மாறு:- பா.றஜீபன் ஏ,2பி, பி.கோபு சி,2எஸ், எஸ்.சுசீலா ஏ,2சி, எஸ். லாவண்ஜா பி,சி,எஸ், பி.லெனின் வளவன் பி.சி.எஸ்,எம்.சிவகுமார் ஏ.2சி,எஸ்,வாமனா ஏ.சி.எஸ். ப.கோகுலம் பி.2சி,எஸ்.கிருஸ்ண தேவி பி.2எஸ், ரி.சுகிர்தா 2சி,எஸ், ரி,லக்சுமிபிரியா பி,2சி, (சோ,கு)


## தேவை

லண்டன் ரி ஆர் ரெக்கினதும் (T.R TECH London), நோர்வே ரெக்கினதும் (NorwayTECH) அனுசரணையுடன் பொருண்மிய மதியுரையகத்தினால் (TECH) கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் பணியாற்ற அனுபவம்மிக்க பணியாளர் தேவை.

**தகவல் தொழில்நுட்ப பயிற்றுவிப்பாளர்:-**

**தகைமைகள்:**

* அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருத்தல்.
* தகவல் தொழில்நுட்பத்தில் அனுபவமிக்கவராக இருத்தல் வேண்டும்.
* ஆங்கிலத்திறன் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
* நிர்வாக அனுபவமிக்கவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* வேதனம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**நிர்வாகப்பணியாளர்கள்:-**

**தகைமைகள்:**

* அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருத்தல் அல்லது அரச/ அரசசார்பற்ற நிறுவனங்களில் நிர்வாக உத்தியோகத்தராக பணியாற்றியிருத்தல் வேண்டும்.
* ஆங்கிலத் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும்.
* வயதுஎல்லை இல்லை.
* வேதனம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி :- 25.08.2004**

**விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:-**

நிறைவேற்றுப்பணிப்பாளர்,
பொருண்மிய மதியுரையகம்,
A9வீதி, இரணைமடுச்சந்தி,
கிளிநொச்சி.

(4954)



## கேள்வி அறிவித்தல்

நிவாரணம், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு

**வடக்கு கிழக்கு மாகாணசபை**

**வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (நியாப்)**

**வங்கிக்கடன் இல: 3301 சீஈ**

01. வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டச் செலவிற்காகச் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தில் பல்வேறு செலாவணிகளில் இலங்கைசனநாயகக் குடியரசு கடனைப் பெற்றுள்ளது. இக்கடனின் ஒரு பகுதியை நீர்ப்பாசன புனரமைப்புக்காக கொடுப்பனவாகச் செலுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

01. வடக்கு கிழக்கு மாகாணசபை கீழ்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதி வாய்ந்த கேள்விதாரரிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றது.

02. கேள்வி ஆவணங்கள் நிறைவேற்றுப் பொறியியலாளர், நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு, அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி (500/=)15.09.2004 முற்பகல் 10.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

04. கேள்விகள் திறக்கப்பட்ட தினத்திலிருந்து 90 நாட்கள் செல்லுபடியுள்ளதாக இருப்பதுடன் கீழுள்ள அட்டவணையின் பிரகாரம் 120 நாட்கள் செல்லுபடியான அங்கீகரிக்கப்பட்ட வங்கியினால் வழங்கப்பட்ட பிணைப்பணச் சான்றிதழ் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விகள் 15.09.2004 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அரச அதிபர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விதாரரின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

05. கேள்வி ஆவணங்கள் பெற்றுக்கொள்வதற்கு முன்பாக ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கட்டணங்கள் ஏதுமின்றி கேள்வி ஆவணங்களை முல்லைத்தீவு நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் பரீட்சிக்கலாம்.

06. கீழுள்ள அட்டவணையில் குறிப்பிட்டவாறு தேவையான ஆகக்குறைந்த ICTAD பதிவும் NCCASL இன் உறுப்புரிமையும் உள்ள கேள்விதாரர்கள் எழுத்து மூலவிண்ணப்பத்தினைச் சமர்ப்பித்து ஆவணத்தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

**அட்டவணை**

| ஒப்பந்த இனங்காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | கேள்வி பிணைப்பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | ஆகக்குறைந்த ICTAD பதிவு |
|---|---|---|---|---|
| VA/NEIAP/RDD/MU/01 | புதுக்குடியிருப்பு மையக்கிராம வீதிகளை புனர்நிர்மாணம் செய்தல், முல்லைத்தீவு மாவட்டம். | 36,000.00 | 500.00 | M8 |

திருமதி,இமெல்டா சுகுமார்,
அரசஅதிபர்,
கச்சேரி, முல்லைத்தீவு.

(சி.9178)



## கணினி புதிய கற்கை நெறிகள் ஆரம்பம்



கிளி.இராமநாதபுரம் ம.வி.யில் நடைபெறும் கணினி பயிற்சி நிலையத்தில் புதிய கணினி கற்கை நெறிகள் ஆரம்பமாகவுள்ளன. இணைய விரும்பும் மாணவர்கள் 17.08.2004க்கு முன் பெயர்களைப் பதிவு செய்வதுடன்18.08.2004அன்று பி.ப.3.00 - 6.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இணைப்பாளர்,
கணினி பயிற்சி நிலையங்கள்,
தமிழீழ மாணவர் அமைப்பு

(4958)



கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

## பொதுக் கூட்டம்

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பழையமாணவர் சங்க வருடாந்தப்பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகசபைத் தெரிவும் எதிர்வரும் 15.08.2004ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு கிளி/மத்திய கல் லூரியின் பிரதான மண்டபத்தில் நடை பெற உள்ளதால் சகல பழைய மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(4957) செயலாளர்.



## பணிநிலை வெற்றிடம்

புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குட்பட்ட வள்ளிபுனம் கிராமத்தில் இயங்கிவரும் பாரதி சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் பின்வரும் பணிநிலைகள் வெற்றிடமாகவுள்ளன தகைமையுடையோர் நேரில் வருகை தந்து நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

சமையலாளர் - 02 பெண்கள் [பட்டறிவு அவசியம்]
பராமரிப்பாளர் - 01 பெண்
சாரதி - 01 ஆண் [40வயதிற்கு மேற்பட்டவர் சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்]

தகவல்:-
இல்ல நிர்வாகம்,
வள்ளிபுனம்,
புதுக்குடியிருப்பு.

(4955)



## சாவு அறிவித்தல்

### நாகமுத்து செல்வராசா

கரம்பொன் தெற்கைப்பிறப்பிடமாகவும் சரவணை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து செல்வராசா பிரான்சில் காலமானார். அன்னார் நாகமுத்து சின்னத்தங்கம் தம்பதிகளின் செல்வப் புதல்வனும், தர்மலிங்கம் சின்னம்மா தம்பதிகளின் மூத்த மருமகனும் ஆவார். இவர் கமலாதேவியின் அன்புக்கணவரும் சாந்தி, காலஞ்சென்ற ஜெயக்குமார் பிரான்சில் வதிப்பவர்களான கிருஸ்ணகுமார், நந்தினி, உஷா, சுபைதா ஆகியோரின் அன்புத்தந்தையும் தனஞ்செயன் (முதன்மை ஆய்வாளர் தமிழீழ காவல்துறை), பிரான்சில் வதிப்பவர்களான சிவசக்தி, ரமேஷ், உதயன் ஆகியோரின் அன்பு மாமானரும், இதயானந், லோகானந், தக்ஷாயினி, நிவேதாயினி, பிரான்சில் வதிப்பவர்களான மாதுகி, மிதுஷா, மோகனா, அனோஸ், உதயங்கா, உதயவேணுகா ஆகியோரின் அன்புப்பேரனுமாவார். இவரது இறுதிக் கிரிகைகள் 16-08-2004 அன்று பிரான்சில் நடைபெறும். இவருக்கான இறுதி அஞ்சலி நிகழ்வுகள் எமது இல்லத்தில் அதேதினம் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*புது.வைத்தியசாலை முன்பாக*
*7ஆம் வட்டாரம்*
*புதுக்குடியிருப்பு*
*முல்லைத்தீவு* (சி.9179)


மகள்
தனஞ்செயன் சாந்தி

# நஜாப் நகரில் தாக்குதல் தொடர்கிறது
# அல்—சதார் காயங்களுடன் உயிர் தப்பினார்

## -படையினரை வெளியேற்ற காலக்கெடு

(பாக்தாத்)

**ஈராக்கில் நஜாப் நகரில் அமெரிக்கப்படையினர் நேற்றும் தாக்குதல்களை நடத்தினர். நேற்றய தாக்குதலில் ஷியா முஸ்லிம்களின் தலைவர் முத்ததா அல் - சதார் காயமடைந்தார். தாக்குதல்கள் தொடர்வதால் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர்.**



நஜாப்பில் காயமடைந்த அல் – சதார் அணித் தீவிரவாதி யொருவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல் கின்றனர்.


நஜாப் நகரின் கணிசமான பகுதிகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் அமெரிக்க கூட்டுப்படைகள் கொண்டுவந்துள்ளமை தெரிந்ததே. இந்நிலையில் நேற்று நடத்திய தாக்குதலில் அல் - சதார் சிறிய காயங்களுக்கு உள்ளாகியதாக தீவிரவாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அல்-சதார் தலைமையிலான குழுவினர் ஆயுதங்களை கைவிட வேண்டுமென ஈராக் பிரதமர் இயாத் அல்லாவி நிபந்தனை விதித்த சில மணித்தியாலங்களின் பின்னர் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காயமடைந்துள்ள அல் - சதார் "நான் உயிரிழந்தால் அதன் பின்னருமே எனது ஆதரவினரால் அமெரிக்கப் படையினருக்கெதிரான மோதலைத் தொடரவேண்டும்" ான வேண்டு கோள்விடுத்துள்ளார்.

இது இவ்வாறிருக்க ஈராக்கில் பஸ்ரா நகரிலிருந்து கடத்தப் பட்ட பிரித்தானிய ஊடகவியலாளரைக் கொல்லப்போவதாக ஈராக் கிளர்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். புனித நகரான நஜாப்பிலிருந்து 24. மணித்தியாலத்திற்குள் அமெரிக்கப்படையினர் வெளியேறாவிட்டால் பிரித்தானிய ஊடகவியலாளரை கொல்லுவோ மென அவர்கள் தெரிவித்துள்ளனர். பஸ்ரா நகரின் தங்கு விடுதி ஒன்றிலிருந்து பிரித்தானிய ஊடகவியலாளர் ஆயுததாரிகளால் நேற்று முன்தினமிரவு கடத்தப்பட்டா ரென சாட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர் கடத்தப்பட்ட சில மணித்தியாலங்களில் வெளியிடப்பட்ட ஒலிநாடா ஒன்றில் நஜாப் மீதான அமெரிக்கப்படையினரின் தாக்குதல் நிறுத்தப் படாவிட்டால் ஊடகவியலாளரை கொல்லப் போவதாக கவசம் அணிந்திருந்த கிளர்ச்சியாளர் ஒருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



பாஸ்ராவில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட லண்டன் சண்டேடெலி கிரப் நாளிதழின் ஊழியரான ஜேம்ஸ் பிரண்டன்.

### ஆர்ப்பாட்டம்

பாக்தாத்தில் ஈராக் அரச மாளிகை மற்றும் அமெரிக்கத் தூதரகம் முன்பாக ஷியா முஸ்லிம்கள் அமெரிக்கப் படையினரின் தாக்குதலுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பலூஜா மற்றும் சமவாவிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.



1967ஆம் ஆண்டு சிரியாவிடமிருந்து கைப்பற்றிய கோலன் குன்றுகளை மீள ஒப்படைக்க இஸ்ரேல் தீர்மானித்திருக்கும் அதே வேளை, அப்பகுதியில் பயிற்சியிலீடுபடும் இஸ்ரேல் இராணுவத்தினர்.

## பணயத் தொகை பெற்ற பின் ஜோர்தான் தொழிலதிபர் விடுதலை

ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட ஜோர்தான் தொழிலதிபரை தீவிரவாதிகள் நேற்று விடுதலை செய்துள்ளனர்.

கடந்தவார தொ[illegible]தில் ஜோர்தான் தொழிலதிபர் சதக்சலாம் தீவரவாதிகளால் கடத்தப்பட்டார். ஈராக்கில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாகத் தொழில்புரிந்து வந்த இந்த தொழிலதிபரை விடுதலை செய்வதற்கு இரண்டரை இலட்சம் அமெரிக்க டொலர்களை பணயத் தொகையாக கேட்டிருந்தனர். இரண்டரை இலட்சம் அமெரிக்க டொலர்களை தொழிலதிபரின் குடும்பத்தினர் வழங்கியுள்ள நிலையில் நேற்று தீவிரவாதிகள் தொழிலதிபரை விடுதலை செய்துள்ளனர்.

## இந்தியா -ஜப்பான் பரஸ்பரம் ஆதரவு

(புதுடில்லி)

ஐ.நா.சபையில் நிரந்தர உறுப்பினர்களாக இடம்பெறுவதற்கு அதற்கான தேர்தலில் பரஸ்பரம் உதவிசெய்து ஒருவரை ஒருவர் ஆதரித்துக்கொள்வதென்று இந்தியாவும் ஜப்பானும் முடிவு செய்துள்ளன. இருநாட்கள் சுற்றுப பயணமாக புதுடில்லி வந்துள்ள ஜப்பான் வெளியுறவு அமைச்சர் ஜாரிகோ கபாஸ்ரிகோவுடன் பேச்சு நடத்திய பின்னர் இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் நேற்று இதனைக் கூறினார்.

இருதரப்பு பொருளாதார உறவுகளை மேம்படுத்தவும் இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன.



ஈராக்கின் புனித நகரான நஜாப்பில் கடும் தாக்குதல் நடத்தப்பட்ட தைக் கண்டித்து பாஸ்ரா நகரில் ஆர்ப்பாட்டம் நடத்தும் ஈராக்கியர்கள்.

## சீனாவின் கிழக்குப் பகுதியில் கடும் சூறாவளி 70 பேர் பலி; ஆயிரக்கணக்கானோர் பாதிப்பு!

(பெய்ஜிங்)

சீனாவில் கடும் சூறாவளி ஏற்பட்டதில் 70பேர் உயிரிழந்துள்ளனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

சீனாவின் கிழக்குப் பகுதியான சீயியாங் மாகாணத்தில் நேற்று முன்தினம் கடுமையான சூறாவளி தாக்கியதில் சுமார் 70,000 கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. கட்டட சேதங்களுள் சிக்கி 70பேர் பலியாகியுள்ளனர். 1800பேர் காய மடைந்துள்ளனர். 15பேரைக் காணவில்லை என்றும் கூறப்படுகின்றது.

மணிக்கு 160 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசுவதால் கடற்கொந்தழிப்பும் ஏற்பட்டுள்ளது. இதனால் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற 70 மீனவர்கள் கடலில் தத்தளித்துக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

வீதிகளில் மரங்கள் சரிந்துள்ளதால் போக்குவரத்து தடைப் பட்டுள்ளது. மின்சாரம், தொலைபேசி வசதி என்பனவும் பாதிக்கப் பட்டுள்ளன.

தொடர்ந்து கனத்த மழையுடன் காற்று வீசுவதால் சீனாவின் கிழக்கு, மத்திய பகுதிகளிலுள்ள எட்டு மாகாணங்களில் சூறாவளி எச்சரிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது.



## இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு புதுடில்லியில் பாதுகாப்பு அதிகரிப்பு

### -விமானங்கள் பறக்கவும் தடை

(புதுடில்லி)

இந்தியசுதந்திர தின விழாவையொட்டி டெல்லி செங்கோட்டையில் பிரதமர் மன்மோகன்சிங் முதன்முறையாகக் கொடி ஏற்றுகிறார். சுதந்திரதின விழாவில் தீவிரவாதிகள் தாக்கும் ஆபத்து இருப்பதால் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. டெல்லியில் உயரே விமானங்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டு இருக்கிறது.

இந்தியாவின் 58 ஆவது சுதந்திரதின விழா நாளை கொண்டாடப்படுகிறது. இதையொட்டி டெல்லி செங்கோட்டையில் பிரதமர் மன்மோகன்சிங் தேசியக் கொடி ஏற்றிவைத்து நாட்டு மக்களுக்கு உரை .ஆற்றுவார். இந்த விழாவில் சோனியாகாந்தி, முன்னாள் பிரதமர்கள்,மத்திய அமைச்சர்கள், வெளிநாட்டு தூதர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்வார்கள். இதனால் தீவிரவாதிகள் குறிவைத்துத் தாக்கலாம் என்ற அச்சம் உள்ளது. இதனால் டெல்லி நகர் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. பொலிசாருக்கு துணையாக துணை நிலை இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் சாலைகளில் ரோந்து சுற்றி வருகிறார்கள். பொதுமக்கள் விழிப்புடன் இருக்கும் படி கேட்டுக்கொள்ளப்பட்டு உள்ளனர்.

சந்தேகப்படும்படியான நபர்கள் யாராவது காணப்பட்டால் அது பற்றி உடனடியாகப் பொலிசாருக்கு தகவல் கொடுக்கும் படி பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

## சந்திரனுக்கு ஆளில்லாத ராக்கெட் இரு ஆண்டுகளில் அனுப்பத்திட்டம்

(பெங்களூர்)

சந்திரனுக்கு அனுப்பப்படும் இந்திய ரொக்கெட் தயாராகி வருவதாகவும், இன்னும் 2ஆண்டுகளில் இந்த ரொக்கெட்டை பறக்க விட திட்டமிட்டு இருப்பதாகவும் 'இஸ்ரோ' தலைவர் மாதவன் நாயர் கூறினார்.

சந்திரனுக்கு ரொக்கெட் அனுப்பும் இந்தியாவில் வான்வெளி ஆய்வுப்பணிகளை 'இஸ்ரோ' என அழைக்கப்படும் இந்திய வான்வெளி ஆய்வுமையம் மேற்கொண்டுள்ளது.

இதற்காக "சந்திரயான்-1"என்ற ரொக்கெட் தயாரிக்கப்பட்டு வருகின்றது.இந்த ரொக்கெட் வரும் 2006-2007 ஆம் ஆண்டுகளுக்கிடையில் விண்ணுக்கு ஏவப்படும்.

புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வான்வெளிக்கு மனிதனை அனுப்புவது என்று இஸ்ரோ முடிவு செய்துள்ளது. அதாவது மற்றநாடுகள் பயன்படுத்தி வரும் தொழில்நுட்ப யுக்திகளை கையாளாமல் புதிய தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்து அதைப் பயன்படுத்துவது என்று இஸ்ரோ தீர்மானித்து இருக்கிறது.

## தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து; அரசாணை வெளியிடக் கோரல்

(சென்னை)

தமிழை செம்மொழியாக அறிவித்துள்ள மத்தியரசு இதற்கான அரசாணையினை வெளியிட வேண்டுமென்று மார்க்சிஸ் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது. சென்னையில் நேற்று முன்தினம் கட்சியின் மூத்த தலைவர் சங்கரய்யா தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் பயிற்சி மொழியாக இருக்க வேண்டும். தமிழ்மொழி படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று தமிழக அரசைக் கோரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் முன்னாள் துணைவேந்தர், பாராளுமன்ற உறுப்பினர்கள், எழுத்தாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டுள்ளனர்.

# தட்டுவன்கொட்டி கிராம அபிவிருத்தித் திட்ட

# ஒப்பந்தத்தில் த.பு.கழகம்- ஜி.ரி.சற் கைச்சாத்து

(அலுவலகசெய்தியாளர்)

**பலதசாப்தங்களாக இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடு விக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தின் ஆனையிறவுப் பிரதேசத்தின் தட்டுவன்கொட்டிக் கிராமத்தினை மீள அபிவிருத்தி செய்து மக்கள் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் ஜி.ரி.சற் நிறுவனமும் கைச்சாத்திட்டுள்ளன.**

இந்நிகழ்வு கடந்த புதன் கிழமை நண்பகல் 11.00 மணியளவில் தட்டுவன்கொட்டி கிராமத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டப் பணிப்பாளர் லோ.கிறிஸ்ரி தலைமையில் நடைபெற்றது.

தட்டுவன்கொட்டி கிராம அபிவிருத்தித்திட்ட ஒப்பந்தத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப்பணிப்பாளர் K.P.றெஜி ஜி.ரி.சற் நிறுவன வடமாகாண முதுநிலை ஆலோசகரும் குழு முதல்வருமான வூல்ப்பாங் கரத்வா ஆகியோர் கையொப்பமிட்டனர்.


இத்திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஜி.ரி.சற் நிதியுதவியுடன் 110 வீடுகள், பொது மண்டபம், இயக்கச் சியிலிருந்து குடிநீர் வினியோகம், வீதி அமைப்பு உட்பட பலஅபி விருத்திப பணிகளை மேற்கொள்ள வுள்ளது.

ஆனையிறவுப் பெரும் படைத்தளத்தைச் சூழ்ந்த இக் கிராமம் முற்றாக அழிவுண்ட நிலையில் மிதி வெடிகள் , பொறிவெடிகள், முட்கம்பி வேலிகள், பாதுகாப்பு அரண்கள நிறைந்து பாதுகாப்பு அச்சுறுத்தல் மிக்க பகுதியாகக் காணப்பட்டது.

தற்போது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் இத் தட்டுவன் கொட்டிக்கிராமத்தில் மிதிவெடிகள், தடையரண்கள் அனைத்தையும் அகற்றி பாதுகாப்பை உறுதிசெய்து மக்கள் மீளக்குடியமர்வதற்கு உதவி செய்து வருகின்றனர்.

தட்டுவன் கொட்டி கிராம மக்கள் மீள்குடியமர்வதற்கு ஆர்வமாக தத்தம் காணிகளை துப்புரவு செய்து வருகின்றமையை காணக் கூடியதாக வுள்ளது. (சோ,கு)

# கிளிநொச்சி செல்வாநகரில் பொது மண்டபம், கையளிப்பு



புதிய வீதி கையளிக்கும் ஆவணத்தை பொறியியலாளர் சிவயோகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரிடம் கையளிக்கிறார்.

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி செல்வாநகர் கிராமத்தில் நியாப் திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பெற்ற பொது மண்டபக் கையளிப்பு வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது. செல்வாநகர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் முத்துச்சாமி தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பொதுமண்டபத்தினை வைபவ ரீதியாக செல்வாநகர் கிராம மக்களின் பாவனைக்கென சங்கத் தலைவரிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் நியாப் நிறுவன பிரதிப்பணிப்பாளர் வினோதராஜ், வீதி அபிவிருத்தித் திணைக்கள எந்திரி சிவயோகன்,கிளி. மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தனபாலசிங்கம், ஊரக வளர்ச்சித் துணைப்பொறுப்பாளர், கனகபுரம், பாரதிபுரம் கி.சே.அலுவலகர்கள் ஆகியோர் கலந்து நிகழ்வினை சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் புதிதாக அமைக்கப்பெற்ற வீதி மற்றும் பொதுக் கிணறு என்பன மக்களின் பாவ னைக்கு கையளிக்கப் பெற்றமையும் குறிப்பிடத் தக்கது. (சோ.கு)

25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு-

# கைம் பெண்ணுக்கு வீடுகட்டிக் கொடுக்க

# தே.வீ.அபி.அ.சபை கிளி. அலுவலகம் முடிவு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தனது 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கிளிநொச்சி புதுமுறிப்புக் கிராமத்தில் கைம் பெண் ஒருவருக்கு வீடொன்றை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது. இதனுடன் 2003ஆம்ஆண்டு காலப்பகுதியில் 80வாடிக்கையாளர்களிற்கும்2004ஆம் ஆண்டில் 33வாடிக்கையாளர்க ளிற்கும் கூரை ஓடுகள் வழங்கப்பட்டுள்ளன.தலா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாபெறுமதியான 100 வீடுகள் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ளது.இதில் 66வீடுகளைத்தவிர 34 வீடுகள் வீடமைப்புஅபிவிருத்தி அதிகாரசபையின் கிளிநொச்சிக் கிளையால்திட்டமிட்டு அமைக்கப்படவுள்ளன. இவற்றில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் கரைச்சிஉதவி அரசாங்க அதிபர் பிரிவில் 22 வீடுகளும், பூநகரி உதவி அரச அதிபர் பிரிவில் 03 வீடுகளும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 09வீடுகளும் அமைத்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1983ஆம்ஆண்டு தொடக்கம் 96ஆம்ஆண்டு வரை வாடிக்கை யாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகைகளை மீளப்பெற்று மீண்டும் கிளிநொச்சி மாவட்டத்திற்குள்ளேயே அவ்நிதியினை மக்களுக்கு வீடமைப்புக்கடனாக வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. சாதாரண வீடமைப்பு கடனாக 50000ரூபாவிற்கு மேல் வழங்கப்படுவதாகவும் அவ்வாறு கடனைப் பெறுவதானால் 7000ரூபாவிற்கு மேல் மாதாந்த சம்பளமாக பெறும் அரச உத்தியோகத்தர்கள் பொறுப்பாண்மை செய்தல் வேண்டும்எனவும், இதற்கு நூற்றுக்கு 11வீதவட்டி அறவிப்படுவதாகவும் கடனாக பெறப்படும் தொகை 5தொடக்கம் 10வருடத்திற்குள் மீளச்செலுத்தபட வேண்டும் எனவும், வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் எம்.ரவீந்திரன் அவர்கள் தெரிவித்துள்ளார். (15)

# கூட்டம்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி சித்தி விநாயகர் ஆலயபரிபாலன சபைக்கூட்டம் ஒன்று எதிர்வரும் 21.08.2004 அன்று ஆலயத்தில் நடைபெறும் என நிர்வாகத்தினர் அறியத்தந்துள்ளனர்.(15)

# மல்லாவி மத்திய கல்லூரிக் கிணறு' த.பு. கழகத்தால் புனரமைப்பு

(மல்லாவி)

மல்லாவி மத்திய கல்லூரியின் வளாகத்தில் உள்ள உடைந்த கிணறு துணுக்காய் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் உடன் புனரமைக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் கிராம தரிசிப்பு நிகழ்வின் போது பாடசாலைகளின் குறைகளை நேரில் சென்று பார்வையிட்ட துறைசார்ந்த அதிகாரிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் உடைந்த கிணற்றைப் பார்வையிட்டு பின்பு துணுக்காய் புனர்வாழ்வுக் கழகத்தினரிடம் உடன் புனரமைத்துக் கொடுக்கும்படி கேட்டதற்கு இணங்க கிணற்றை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் புனரமைத்துக் கொடுத்துள்ளனர் . (24)

# 36 முன்பள்ளிச் சிறார்களின் விளையட்டு விழா

(புதுக்குடியிருப்பு)

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய ஒழுங்கமைப்புடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் வடக்குகிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து நடாத்திய 36 முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டு மைதானத்தில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் ஜே.நிகால்டின் தலைமையில் ஆரம்பமானது.

முதல் நிகழ்வாக முன்பள்ளிச் சிறார்களின் பாண்ட்வாத்திய அணி வகுப்புடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. மங்கல விளக்கினை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் அவர்களும், தமிழீழ மருத்துவ களமுனைப் பொறுப்பாளர் மனோஜ் அவர்களும் ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை முல்லை. மாவட்ட அரசியல துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணன் அவர்கள் ஏற்றி வைத்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழகக்கொடியினை சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவன இணைப்பாளர் யூட் ஏற்றி வைத்தார். (08)

# இடைவிலகிய மாணவர்கள் 148 பேர் பாடசாலையில் இணைக்கப்பட்டனர்

(கிளிநொச்சி)

யுனிசெவ் நிதியுதவியுடன் கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட "ஒவ்வொரு குழந்தையையும் பாடசாலைக் கல்வி கற்றலில் இணைத்தல்" திட்டத்தின் கீழ் 2004 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் 148 இடைவிலகிய மாணவர்கள் பாடசாலையில் இணைக்கப்பட்டு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன்,3989 ஒழுங்கற்ற வரவுள்ள மாணவர்களுக்கும் இதுவரை கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# சான்றிதழ் வழங்கல் இன்று

(அலுவலக செய்தியாளர்)

கனேடிய தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கணினிப் பயிற்சி நெறியின் நான்காவது தொகுதி மாணவர்களின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு தமிழர் புனர்வாழ்வுக்கழக கணினிப்பயிற்சி நிலையத்தில் இன்று மு.ப. 11.00 மணிக்கு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தீ)

# வாக்காளர் பதிவு நடவடிக்கை கிளி.செயலகத்தில் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது வாக்காளர்கள் பதிவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பெற்று நடைபெற்று வருகின்றன. தேர்தல் திணைக்கள அதிகாரிகள் இருவர் நேற்று முன்தினம் கிளி. அரச செயலகத்திற்கு வருகை தந்து தமது பணிகளைப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளனர்.

அதற்கு முன்னதாக இந்த அதிகாரிகள் இருவரும் கிளி. அரச அதிபரை அவரது காரியாலயத்தில் சந்தித்து மாவட்ட நிலவரங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

1983 ஆம் ஆண்டு முதல் வன்னிப் பெருநிலப்பரப்பில் வாக்காளர் பதிவுகள் இடம் பெறாமை காரணமாக பல்லாயிரக் கணக்கான மக்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெறவில்லை. இதன் காரணமாக இவர்கள் வாக்களிக்கத் தகுதியிருந்தும் வாக்களிக்க முடியாத நிலைக்குத்தள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

# புதிய கற்கை நெறிகள் விரைவில் ஆரம்பிக்கும்

## -கிளி.தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தில் மின் ஒட்டுதல்,முச்சக்கர வண்டி திருத்துதல்,உழவு இயந்திரம் திருத்துதல் போன்ற கற்கை நெறிகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என தொழில் நுட்பக் கல்விநிறுவன நிர்வாகத்தினர் அறியத்தருகின்றனர்.

இக்கற்கை நெறியில் இணைந்து மாணவர்கள் பயனடையலாம் எனவும்,இது தொடர்பான விபரமான தகவல்கள் பின்னர் அறியத்தரப்படும் எனவும் அறிய முடிகிறது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் நிறுவனங்களிற்கான கணக்கியல் தொழில்நுட்பம் (A.A.T) கற்கை நெறிகளிற்கு பதிவு செய்த அனைவரையும் இம் மாத இறுதிக்குள் கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக் கல்வி நிறுவன நிர்வாகத்தினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றனர். (15)

## ஆண்டு நிறைவு விழா

(மாங்குளம்)

ஒலுமடுக் கிராமம் மாதர் அபிவிருத்திச் சங்க ஈராண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் 1.00 மணிக்கு ஒலுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் மாதர் சங்கத் தலைவி புவனேஸ்வரி தலைமையில் சிறப்பாக இடம் பெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர், முல்லை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் முகுந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மாந்தை கிழக்கு பி. செயலர் பிரிவில் 2ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வன்னிவிளாங்குளம், பனங்காமம் கிராமங்களில் 2 ஆரம்ப சுகாதார நிலையங்களின் திறப்புவிழா நிகழ்வு கடந்த திங்கட்கிழமை காலை 9.00மணியளவில் வன்னிவிளாங்குளம் கிராமத்திலும், காலை 11.00 மணியளவில் பனங்காமத்திலும் இடம் பெற்றது. வன்னிவிளான்குளம் ஆரம்பசுகாதார நிலையப் பெயர்ப்பலகையை மாந்தை கிழக்கு அரசாங்க அதிபர் ச.அ ஜெறோம் திரைநீக்கம செய்து வைக்க ஆரம்ப சுகாதார நிலையத்தினை முல்லை.மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் கலாநிதி ரி.டபிள்யு ஜெயக்குலராஜா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து பனங்காமம் பகுதியில் அமைக கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின் பெயர்ப் பலகையை யுனிசெப் பிரதிநிதி செல்வி ஹிறோகா (Miss, Hiroka) Unicef Asst, Project Officer) திரைநீக்கம் செய்து வைக்க சுகாதார நிலையத்தினை பிரதிசுகாதார சேவைப் பணிப்பாளர் கலாநிதி ரி.டபிள்யு ஜெயக்குலராஜா நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.மேற்படி ஆரம்பசுகாதார நிலையங்கள் இரண்டும் யுனிசெப் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப் பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (24)

# புதிய கட்டடம் திறந்துவைப்பு

(மன்னார்)

மன்னார் தச்சடம்பன் றோ.க.பாடசாலைக் கட்டடம் கடந்த புதன் கிழமை வன்னி பாரா ளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது 20 இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட இந்தக்கட்டடத்துக்கு உலக வங்கியின் உதவியுடன் நிகொட்டும் நிதியுதவி செய்திருந்தது. (மி)

# தீவகத்தில் குடிநீருக்கு தட்டுப்பாடு

# குடிநீர் விநியோகமும் சீரில்லை

## தேவைகளை நிறைவேற்ற அவலம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.தீவகத்தின் பல்வேறு பகுதிகளில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. அத்துடன் குடிநீர் விநியோக நடவடிக்கைகளும் சீரின்றிக் காணப்படுவதாக முறையிடப்பட்டுள்ளது.**

தீவகத்தில் உள்ள நயினா தீவு, புங்குடுதீவு வேலணை, மண்டைதீவு ஆகிய பிரதேசங்களில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக யாழ்.குடாநாட்டில் நிலவிவரும் கடும் வரட்சி காரணமாக குடிநீர்க் கிணறுகள் வற்றிவிட்டதனாலேயே இவ்வாறு குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி .வருகிறது.

இதனால் அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் தமது அன்றாட தேவையைப் பூர்த்தி செய்வதற்கான குடிநீரைப் பெறுவதற்கு பெரும் அவலங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இவ்வாறு குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் பிரதேசங்களுக்கு "பவுசர்" மூலமாக வழங்கப்பட்டு வரும் குடிநீரும் சீரான ஒழுங்கில் கிடைப்பதில்லை என மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (33)



மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 66-ஆவது பிறந்ததின நினைவு நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா உரையாற்றுகிறார். (படம் செல்வா)

# புலிகளின் யோசனைகளை ஏற்கவேண்டிய சூழல் சிறிலங்கா அரசிற்கு இன்றுள்ளது

## பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் எனக் கூறிக் கொண்டு அவர்களை அழிப்பதில் முனைப்புக்காட்டி வந்த சிங்கள அரசியல் தலைவர்களும் சர்வதேச நாடுகளும் இன்று அவர்களது யோசனைகளை ஏற்று நடக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் அலுவலகத்தில் இடம் பெற்ற மாமனிதர் குமார் பொன்னம்பலத்தினுடைய 66 ஆவது பிறந்ததின நினைவு நாள் நிகழ்வில் கலந்துகொண்டு. உரையாற்றிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

தமிழ் காங்கிரசின் உப செயலாளர் ஆனந்தராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட கட்சி உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய மாவை. சேனாதி ராசா இனவிடுதலை கோரிப் போராடிய புலிகளை பயங்கர வாதிகள் எனக்கூறி அவர்களை அழிப்பதில் சிங்களப் பேரினவா திகளும், சர்வதேச ஏகாதிபத்தியவாதிகளும் முனைப்புடன் செயற்பட்டு வந்தனர்.

ஆனாலும் தமிழ் மக்கள் புலிகள் செய்வது பயங்கரவாதப்போர் அல்ல. இது ஒரு இனவாதப் போராட்டம் என்பதை தமிழ் மக்கள் தமது ஒன்றுபட்ட குரலில் எடுத்துரைத்து நின்றதினால் இன்று புலிகளின் பேச்சுக்களை ஏற்க வேண்டிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் புலிகள் மேற்கொண்ட மக்கள் மயப்படுத்தப்பட்ட இனவிடுதலைப் போராட்டத்தில் உண்மைகளை உலகறியச் செய்தவர்களில் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தினது பணியும் அரியது என்றார். எனினும் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் தமிழ் மக்கள் புலிகளின் கரங்களுக்குப் பலம் சேர்த்து பலத்தை தக்க வைக்கவேண்டும் என்றார். (33)

# தீவகப்பகுதிக் கிராமங்களின் அபிவிருத்திக்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். தீவகப் பகுதியில் உள்ள பின்தங்கிய பிரதேசங்களை இனங்கண்டு அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உலக உணவுத் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக யாழ். அரச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனடிப்படையில் கடந்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள தீவகப் பகுதிக் கிராம மக்களுக்கான குடிநீர் வசதி, பாடசாலை அபிவிருத்தி, போக்குவரத்து சீராக்கல் சுகாதார வசதி, பொருளாதார மேம்பாட்டு உதவிகள் என்பன வழங்கப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# வீதியோரத்தில் வாகனங்கள் நிறுத்தம்; கட்டுப்படுத்த நடவடிக்கை வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மருதனார் மடம் சந்தையை அண்மித்துள்ள வீதியோரங்களில் கனரக மற்றும் சிறியரக வாகனங்கள் நிறுத்தப்படுவதால் அப்பகுதிகளில் அடிக்கடி வீதி நெரிசல்கள் ஏற்பட்டு வருகிறன.

சந்தைக்கு பொருட்களை ஏற்றி இறக்கவரும் வாகனங்களும், வாடகைவாகனங்கள், பிறதேவைகளுக்காக வரும் வாகனங்களும் அப்பகுதி வீதி ஒரங்களில் நிறுத்திவைக்கப் படுவதனால் ஏற்படும் இவ்வாறான வீதி நெரிசல்கள் காரணமாக விபத்துக்கள் இடம்பெறும் அபாயமும் அப்பகுதியில் காணப்படுகிறது.

எனினும் இயல்பான மக்களது போக்குவரத்துக்கு இடையூறாக வீதி ஓரங்களில் வாகனங்கள் நிறுத்தப்படுவதைக் கட்டுப்படுத்த சிறிலங்கா போக்குவரத்துக் கண்காணிப்பு பொலிசார் எதுவித நடவடிகையும் எடுக்காமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

### அடித்துக்கொலை

காணிப்பிரச்சினை காரணமாக தனையன் தந்தையை அடித்துக் கொன்ற சம்பவம் ஒன்று வவுனியா புதுபுலான்குளம் பகுதியில் புதன் கிழமை இடம் பெற்றுள்ளது. காணியினைப் பிரிப்பது தொடர்பாக தந்தைக்கும் மகனுக்கும் வாய்தகராறு இடம் பெற்றுள்ளது. வாக்வாதம் முற்றிய போது மகன் தந்தையைப் பொல்லு கொண்டு தாக்கியுள்ளார். இதன் போது 70வயதான வன்னி காமினிகே லொக்கு பண்டார என்பவர் இறந்துள்ளார். பொலிசார் சந்தேக நபரினைக் வவுனியா நீதிமன்றில் ஆஜர் படுத்தியபோது எதிர் வரும் 26 ஆம் திகதி விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டுள்ளது. (21)

# நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் இடம் பெறவுள்ளது.

இதற்காக ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயமான நல்லைக் கந்தன் ஆலய உற்சவத்திற்கு தென்னிலங்கை உட்பட நாட்டின் பலபாகங்களிலிருந்தும் மக்கள் வருகை தர இருப்பதனால் ஆலயச் சூழலில், கலாசாரத்தைப் பேணுதல் மற்றும் திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தல் என்பவற்றிற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (33)

# கணினிக் கூடங்களை அமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களின் கணினி அறிவினை மேம்படுத்துவதற்கான நிதி உதவிகளை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேச மாணவர்களின் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந் நிதியுதவிகள் தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு வழங்கப்படுகின்றன.

இதனடிப்படையில் முதற்கட்டமாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீட்டில் வரணி மகாவித்தியாலயம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி என்பவற்றில் கணினிக் கூடங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது..(33)

# குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களின் விபரம் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மற்றும் இடப்பெயர்வுகள் என்பவற்றால் பாதிக்கப்பட்டு துணை இழந்த பெண்கள், சிறார்களினது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த யாழ்.மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிலையம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பொருளாதாரம்,கல்வி, சமூக மேம்பாடு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படவுள்ள இம்மேம்பாட்டுத் திட்டத்திற்கு பயனாளிகளைத் தெரிவு செய்வதற்காக போரினால் கணவன் மார்களை இழந்த பெண்களதும் பெற்றோர்களை இழந்த சிறார்களது விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. (33)



தென்மராட்சி தேசிய எழுச்சிப் பேரவைக் காரியாலயம் சாவகச்சேரி கந்தையா வீதியில் கடந்த 9 ஆம் திகதி காலை திறந்து வைக்கப்பட்டது. அவ்வேளை யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொருளாளர் சி.சிவராசா பொதுச்சுடரேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கின்றார்.

# விவசாயபீடப் பீடாதிபதியின் நான்கு நூல்கள் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடப்பீடாதிபதி எஸ். இராசதுரை எழுதிய வேளாண்துறைசார் நான்கு நூல்கள் அறிமுகவிழா கடந்த செவ்வாயன்று மாலை 3.மணியளவில் யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் சமுதாய மருத்துவத்துறை பேராசிரியர் எஸ். சிவசுந்தரம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் முதன் நிகழ்வான மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து வரவேற்புரையை தயானந்தன் நிகழ்த்தினார். தலைமை உரையைத் தொடர்ந்து ஆசியுரையை வண.பிதாஏ.ஜ பேணாட் நிகழ்த் தினார். அதனைத் தொடர்ந்து அறிமுக உரையை யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ். மோகனதாஸ் நிகழ்த்தினார். வாழ்த்துரையை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.இளம்பருதி நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து முதற் பிரதியை யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் இருந்து யாழ் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ம.சிவசூரிய பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் வாழ்த்துரை வழங்கிய யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி , இப்படியான அளப்பரிய பங்காற்றிய பீடாதிபதி இராசதுரை அவர்களுக்கு தமிழ் இனத்தின் சார்பிலும், இயக்கத்தின் சார்பிலும் நன்றி தெரிவித்தார். (36)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# "விசுவியஸ்" எரிமலை

உலகில் பல அபாயகரமான எரிமலைகள் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அவற்றுள் மிகப் பயங்கரமானது எனக் கருதப்படும் எரிமலை இத்தாலியிலுள்ள "விசுவியஸ்" ஆகும்.

இதுவரை ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொண்டுள்ள இவ் எரிமலை அண்மைக்காலமாக குமுறவில்லையாயினும் அது எந்த நேரமும் வெடித்துச் சிதறும் அபாயம் இருப்பதாக புவியியலாளர்கள் எச்சரித்துள்ளனர்.

இவ் "விசுவியஸ்" எரிமலை முதன் முதல் கிறிஸ்துவுக்கு முன் 63 ஆம் ஆண்டில் வெடித்ததாக கூறப்படுகிறது. இந்த மலையடிவாரத்தில் "பொம்பிய்" "ஹர்கியூ" என்ற இரு நகரங்கள் உள்ளன. இந்த எரிமலைக் குமுறலினால் இந்நகரங்களில் வாழ்ந்த பல நூறு உயிர்களும் நகரக் கட்டடங்களும் சேதமாகின. இது இலங்கையிலுள்ள ஹுன்னஸ்கிரிய மலையின் தோற்றத்தைப் போன்றது. "விசுவியஸ்" மலையடிவாரத்தில் குடியிருக்கும் உகோ கொரட் என்பவர் தெரிவித்திருப்பதாவது, கடைசியாக 1944 ஆம் ஆண்டில் மேற்படி எரிமலைக் குமுறல் ஏற்பட்டதாகவும், அப்போது தனக்கு 12 வயதே ஆகும் என்றும் கூறியதுடன் அன்று ஏற்பட்ட வெடிப்பினால் பல அனர்த்தங்கள் நிகழ்ந்ததாகவும், அது இன்றுவரை மறக்க முடியாத சம்பவமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.


எரிமலை வெடிப்பு எவ்வாறு நிகழ்கிறது என்பது பலரினதும் கேள்வியாகும்.

அநேகமான மலைகள் உருவாகியிருப்பது பாறைகளாலும் மண்ணாலும் ஆகும். இம்மலைகளின் உச்சியில் பாரிய மரஞ்செடிகள் வளர்வதில்லை. இதனால் சூரியனின் நேரடியான வெப்பம் மலையை தாக்குவதால் அங்கு பாறைகள் சூடேறிய நிலையில் புவி மத்தியலுள்ள பாறைக்குழம்பும் (லாவா) மிகச் சக்தி வாய்ந்த வாயுவும் புவியின் மேற்பரப்பில் பலவீனமான ஓட்டுப் பகுதி அமைந்துள்ள இடத்தைப் பிரித்துக் கொண்டு வெளியேறுவதையே எரிமலை வெடிப்பு என்று கூறப்படுகின்றது என விஞ்ஞானியான பேராசிரியர் பெஷோ தெரிவிக்கின்றார். இவ்வாறான புவிக்குள் ஏற்படும் மாற்றத்தை முன்கூட்டியே கண்டறிவதற்காக மலையில் ஆங்காங்கே விஞ்ஞான உபகரணங்கள் வைக்கப்பட்டு அதில ரடார் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் பாரிய உயிர்ச சேதங்களையும் பொருட்சேதங்களையும் தவிர்க்க முடியும் என்றும, பேராசிரியர் பெஷோ தெரிவித்துள்ளார்.



மூடு பனியில் இருக்கும் ஒரு ஓநாய். "ஜெவேடொன்" ஓநாய்ப் பூங்காவில் இந்த ஓநாய் காணப்படுகின்றது.

# உலகில் மிகஉயர்ந்த கட்டடம்



தாய்வான் நாட்டிலுள்ள தைப்பே நகரில் 509 மீற்றர் அதாவது 1671 அடி கொண்ட உலகின் உயரமான கட்டடம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

உலகின் உயரமான கட்டடம் இதுதான்.509மீற்றர் அதாவது 1671அடிஉயரம் கொண்ட இக் கட்டடத்தில் 101அடுக்குகள் உள்ளன. தாய்வான் நாட்டிலுள்ள தைப்பே நகரில் இந்த கட்டடம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. சி.ஓய்.லீ. அண்ட் பார்ட்னர்ஸ் என்கிற கட்டட நிறுவனம் இதை நிர்மாணித்திருக்கிறது. சுற்றிலும் வண்ணக் கண்ணாடிகள் பதிக்கப்பட்டு இரவும் பகலும் இக் கட்டடம் ஜெகஜோதியாக ஜொலிப்பது அனைவரையும் கவர்ந்துள்ள அம்சமாகும்.

# முதலில் களைப்படைவது மூளையா? உடலா?


மனித நடவடிக்கைகளின் போது முதலில் களைப்படைவது உடலா, மூளையா என ஆய்வு நடத்தப்பட்ட பின்னர் மூளைத் தொகுதியே முதலில் களைப்படைகிறது என்ற முடிவு பெறப்பட்டுள்ளது.

இந்த முடிவுக்கு முன்னர் மனித நடவடிக்கைகள் உதாரணமாக வேலை செய்யும் போது அல்லது உடற்பயிற்சிகளில் ஈடுபடும் போது இன்டலெயுகின் (INTERLE UKIN6) என்ற அணுக்கள் மூலமாக மனிதனின் மனதுக்கு தகவல் சென்றடைவதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த தகவலுக்கேற்ப மனிதனின் உடல் தொடர்ந்து நடவடிக்கையில் ஈடுபடுகின்றது என்பது தெளிவாகியுள்ளது. இந்தத் தகவல்களைத் தொடர்ந்து மனதுக்கு அனுப்புவதால் மூளைப் பகுதி முதலில் களைப்படைந்து தகவல் அனுப்புவது குறைவடைகிறது. இதனாலேயே மனிதன் தான் களைப்படைவதை உணர முடிகிறது என தென்னாபிரிக்காவின் கேப்ரவுன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் றொபின்சன் அனஸ்லி என்ற பெண் விஞ்ஞானி தலைமையிலான ஆய்வுக்குழு தெரிவித்துள்ளது.

இது பற்றி அனஸ்லி கூறியிருப்பதாவது தான் பொழுது போக்குக்காக விளையாட்டுக்களில் ஈடுபடுவதால் இந்த ஆய்வை முக்கியமாக மேற்கொள்ள வேண்டுமென சிந்தித்ததாகத் தெரிவித்துள்ளதுடன் இந்த ஆய்வின் முடிவினால் தமது சந்தேகம் தீர்த்து வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கிறார்.

# இதயத் துடிப்பை சீராக்க கருவி

இருதயத் துடிப்பு சீராக இல்லாமல் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு உதவ புதிய சாதனம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது ஒரு எலக்ரோனிக் சாதனம். இதனை நோயாளியின் இருதயத்தில் பொருத்திவிட வேண்டும். இருதயத் துடிப்பு மாறுபடும் போது அபாய எச்சரிக்கை வெளிப்படும். அப்போது தூரத்தில் இருந்தப்டியே டாக்டர்கள் இந்த இருதயத் துடிப்பை சரி செய்ய உத்தரவு அனுப்ப முடியும். மின் அலைகள் மூலம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்படும்.



"மியாமி" யில் உள்ள காடொன்றில் இரட்டைப் பெண் வாலில்லாக் குரங்குள் தமது இல்லத்தில் விளையாடுகின்றன. கடந்த 2003-டிசம்பர் 2 ஆம் திகதி பிறந்த இந்த இரட்டை வாலில்லாக் குரங்குகள் இருபது வருடங்களில் பிறந்த முதல் இரட்டையர் என்ற சாதனையைப் புரிந்துள்ளன. யூலை 24 இல் இவை மக்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

# அளவுக்கதிகமான உடற்பருமன்
# உடலின் வளர்சிதை மாற்றத்தைப் பாதிக்கின்றது

பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் கொழுக் மொழுக் என்று இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். அவர்கள் எதிர்பார்ப்பை மீறி குழந்தைகள் ஒல்லியாக இருந்தால் வருத்தப்படுகிறார்கள்.இதில் கவலைப்படுவதற்கு ஒன்றுமே இல்லை. இன்னும் சொல்லப் போனால் ஒல்லியான குழந்தையைக் காட்டிலும் குண்டான குழந்தைகளுக்குத் தான் நிறைய உடல் நலக் குறைவுகள் ஏற்படுகின்றன.

ஆம்! 4 வயதுக்குட்பட்ட கால கட்டத்தில் மிகவும் உடல் பருமனாக இருக்கும் குழந்தைகள், மத்தியதர வயதில் கடுமையான நோய்களால் அடிக்கடி பாதிக்கப்படுகிறார்கள் என்று ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சாதாரண எடைக்குக் கூடுதலாக எவ்வளவு குண்டாக இருக்கிறார்களோ, அதற்குத் தகுந்தாற்போல அவர்களுக்கு நாட்பட்ட சிக்கல்கள் உண்டாகின்றன.இதில் அவர்கள் தொடக்கப் பள்ளியை எட்டுவதற்கு முன்பாக பாதிக்கப்பட்டு விடுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அளவுக்கதிகமான உடல் பருமன் உடலின் வளர்சிதை மாற்றத்தை பாதிக்கின்றது.அதன் எதிரொலியாக இதய நோய்கள், நீரிழிவு உள்ளிட்ட ஆபத்துக்கள் குழந்தைகள் வளர வளர அதுவும் கூடவே வளரும்.

கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் வளர்சிதை மாற்றம் பாதிக்கப்படும்.

*.இடுப்பளவு ஆண்களுக்கு 40 இஞ்சிற்கும், பெண்களுக்கு 35 இஞ்சிற்கும் அதிகம் போனால்.....

*.ரத்தத்தில் உள்ள டிரைகிளிசரைடுகளின் அளவு 150-.இற்கும் அதிகமானால்.......

*.எச்டிஎல் எனப்படும் நல்ல கொழுப்பு ஆண்களுக்கு 40-இற்கும், பெண்களுக்கு 50-இற்கும் கீழே சென்றால்....

*.ரத்த அழுத்தம் 130/85-இற்கும் அதிகமானால்....

ஆகையால் குழந்தைகள் கொழுகொழுவென்று இருக்க வேண்டும் என்று ஆசைப்பட வேண்டாம் வயதுக்குத் தகுந்த உடல் எடையுடன் இருந்தால் போதும்.

அளவுக்கதிகமான உடற் பருமனுள்ள குழந்தைகளின் இதயத்தில் அடிக்கடி அபாயகரமான மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று புதிய ஆய்வு சொல்கிறது.

இயல்பான அளவுக்கு மீறிய உடல் எடை உள்ள குழந்தைகளுக்கு இதயத் தசைகள் கடினமாகி விடுகின்றன. இதனால் அத்தகைய குழந்தைகள் ஆபத்தை எதிர் நோக்க வேண்டியுள்ளது. சின்சினாட்டியில் உள்ள குழந்தைகள் மருத்துவ மையத்தைச் சேர்ந்த டாக்டர் தாமஸ் கிம்பல் என்பவர் 12 வயதுக்குட்பட்ட 340 குழந்தைகளின் இதயத்தில் ஏற்படும் மாறுதல்கள் பற்றி பரிசோதனைகள் செய்தார். அப்போது குண்டுக் குழந்தைகளின் இதயத் தசைகள் கடினமாகும் ஆபத்து படிப்படியாக அதிகரிப்பது தெரிய வந்தது. ஆகையினால் குழந்தைகளின் உடல் பெருக்க விடாமல் தடுப்பது மிகவும் முக்கியமானதாகும். அதற்கு வெளிப்புற உடற்பயிற்சிகளில் அவர்களைத் தவறாமல் ஈடுபடுத்த வேண்டும். உடலில் அதிகப்படியாகச் சேர்ந்த கலோரிகள் எரிக்கப்படும் போது உடல் பருமன் தானாகவே குறைந்து விடும்.

# "சார்ஸ்" கிருமிகளை வேகமாக கண்டுபிடிக்க தொழில்நுட்பம்

சிங்கப்பூரைச் சேர்ந்த விஞ்ஞானிகள் "சார்ஸ்" கிருமிகளை அதிவேகமாக கண்டுபிடிக்க உதவும் தொழில் நுட்பத்தை உருவாக்கி உள்ளனர்.

சார்ஸ் கிருமிகளை கண்டுபிடிப்பதற்கு மாலிக்குலர் சோதனை எடுக்கப்படுகிறது. இந்த முறைப்படி வந்திருப்பது "சார்ஸ்" கிருமிகள் தானா? இல்லையா? என்று தெரிய வருவதற்கு 1 வாரம் பிடிக்கும். ஆனால் தற்போது சிங்கப்பூர் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ள புதிய தொழில் நுட்பத்தின் படி "சார்ஸ்" கிருமிகளைக் கண்டுபிடிப்பதற்கு மூன்று நாட்கள் போதும். இந்த முறைப்படி நோயாளியின் உடம்பில் இருந்து "சார்ஸ்" கிருமிகளின் ஆர்.என்.ஏ மட்டும் பிரித்தெடுக்கப்பட்டு ஒரு சின்ன சிப்பில் வைத்து அதனுடைய மரபணுக் குறியீடு கண்டுபிடிக்கப்படுகிறது. இது போன்று ஒரு சிப்பில் 50 மாதிரிகள் வரை பரிசோதனை செய்யலாம். இதனால் நிறைய நோயாளிகளை ஒரே நேரத்தில் பரிசோதனை செய்ய வாய்ப்புள்ளது. சார்ஸ்சுக்குக் காரணமான ஒவ்வொரு தனித்தனிக் கிருமிகளும் தெளிவாக அடையாளம் காணப் படு தால் நோயின் மூலம் எது? எந்த நிலையில் இருக்கிறது? என்ன சிகி சை தேவைப்படும் என்ற விட ங்கள் தெளிவாகத் தெரிய வரும். இதையடுத்து அதற்குத் தகுந்தாற் போல சிகிச்சையளித்து நோயாளிகளை எளிதில் குணப்படுத்த வாய்ப்புக் கிடைக்கின்றது. கடந்த 2003ஆம் ஆண்டு சார்ஸ் நோய் சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் பரவிய போது எண்ணாயிரம் பேர் பாதிக்கப்பட்டனர். அவர்களில் எண்ணூறிற்கும் மேற்பட்டோர் பரிதாபமாக உயிரிழந்தனர். இதில் சிங்கப்பூரில் மட்டும் 33 பேர் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிறவியிலே பார்வையற்றோருக்கு கேட்கும் சக்தி அதிகம்

பிறவியிலேயே கண்பார்வையின்றிப் பிறக்கும் குழந்தைகளுக்கு காதுகேட்கும் திறன் அபாரமாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சாதாரண குழந்தைகளுடன் ஒப்பிடும் போது இவர்களுக்கு காது கேட்கும் திறன் 10 மடங்கு அதிகமாக உள்ளது. ஆனால் அதேகுழந்தைகள் சற்று வளர்ந்த நிலையில் வாழ்க்கையில் பிற்பாடு ஒருவேளை கண்பார்வையை இழந்தால் அவர்களுக்கு இதுபோன்ற பரிசு கிடைப்பதில்லை. பிறவியிலேயே குருடாகப் பிறந்தவர்கள் சத்தங்களை துல்லியமாகக் கணிப்பதில் சிறந்து விளங்குகிறார்கள். எந்தவிதமான குறையுமின்றி பிறந்தவர்களுடன் ஒப்பிடும் போது இவர்களின் இந்தத் திறன் 10மடங்கு கூடுதலானது. இளம் பராயத்தில் பார்வை திறனுக்கான சக்தியை கேட்கும் திறனுடன் மூளை சமன் செய்வதே இதற்குக் காரணமாகும்.

# கிளி.மாவட்ட மீனவர்கள் — தொடர்ந்தும் கவனிப்பாரற்ற நிலையில்

கிளிநொச்சி மாவட்டதின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் விவசாயத்துக்கு அடுத்தபடியாகப் பேசப்படும் கடற்றொழில் மீண்டும் உயிர் பெறுவதற்காகப் போராடிக்கொண்டிருக்கிறது.

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்கள் மீது சிங்கள இன வெறியர்களால் கொடுமையான போர் கட்டவிழ்த்து விடப்பட்டது. இதனால் மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்தனர்; தமது சொந்தநிலத்தை இழந்தனர்; உடன் பிறப்புக்கள், தாய்தந்தையரை இழந்தனர்; அன்றாடம் தமது வயிற்றுக்குச் சோறு போடும் தொழிலைக்கூட இழந்தனர். இதனால் மக்கள் பொருளாதார ரீதியாக பெருமளவு பலவீனமடைந்து தமது வாழ்வை கொண்டுநகர்த்துவதற்கு முடியாதவர்களாக இருந்தனர். அவ்வளவுக்கு சிறிலங்கா அரசு தமிழ்மக்கள் மீது அக்கிரமங்களை கட்டவிழ்த்து விட்டிருந்தது.

இதனால் கிளிநொச்சி மாவட்டம் தொழில் ரீதியாகப் பெரும் பின்னடைவைச் சந்தித்திருந்தது. விவசாயத்தைப் பொறுத்தவரை ஓரளவு முன்னேற்றம் கண்டிருந்தாலும் கடற்றொழிலில் இவர்களால் முன்னேற்றம் காணமுடியவில்லை. ஆனையிறவுப் படைத்தளம் உருவாக்கப்பட்டது முதல் கடற்றொழிலாளர்கள் கடலில் சுதந்திரமாக தொழில்செய்யமுடியாதவர்களாக மாற்றப்பட்டார்கள். ஆனையிறவுத் தளத்தின் பாதுகாப்பிற்காக பூநகரி கைப்பற்றப்பட்டது. பின்னர் கடலில் கடற்படையின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன. இதனால் தொழிலாளர்கள் கடலில் தாக்கப்பட்டனர். அவர்களது தொழில் உபகரணங்கள் அழிக்கப்பட்டன. இதனால் கடற்றொழிலாளர்கள் கடலில் சுதந்திரமாக தொழில் செய்ய முடியாத நிலை உருவானது ஒரு கட்டத்தில் மாவட்டத்தின் கடற்றொழிலே ஆட்டங்கண்டது என்று கூடச் சொல்லலாம்.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை சுண்டிக்குளம் முதல் கல்முனை, கௌதாரிமுனை, பாலைதீவு, இரணைதீவு உட்பட இலுப்பைக்கடவை மூன்றாம்பிட்டி வரையில் கடற்பிரதேசம் உள்ளது. இந்தக் கடற்பகுதியைப் பயன்படுத்தி மாவட்டத்தின் 1/3 பங்கு (27% மானவர்கள்) மக்கள் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

யுத்த சூழலுக்கு முன்னர் சுமார் 7000 வரையான குடும்பங்கள் தொழிலில் ஈடுபட்டுவந்தனர். இப்பொழுது யுத்தத்தால் உயிரிழந்தவர்கள், அங்கவீனமுற்றவர்கள், இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசித்து இன்னமும் மீளக்குடியமராதவர்கள், தொழில் செய்யமுடியாமல் இருப்பவர்கள் என 2500இற்கும் அதிகமான குடும்பங்கள் மீன்பிடித்தொழிலில் ஈடுபட முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர். மீதி 4321இற்கும் அதிகமான குடும்பங்கள் தான் இப்போது மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர் இவர்களில் 14961 தனிநபர்கள் தான் மீன்பிடித்தொழிலில் ஈடுபடக் கூடிய வாய்ப்புடையவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களில் 4522 பேர் தான் அதிகளவில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு ஏற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள்தான் தொடர்ச்சியாகத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.



ஏனைய 10,000 இற்கும் அதிகமானவர்கள் மீன்பிடித்தொழிலில் ஈடுபடமுடியாமல் இருப்பதற்கான காரணம் சிங்கள அரசுகள் மேற்கொண்ட இன வெறித் தாக்குதல்கள் காரணமாக இழந்த தொழில் உபகரணங்களை ஈடுசெய்யமுடியாதமையேயாகும்.

கடந்த காலங்களில் 1485இற்கும் அதிகமான கடற்கலங்களை வைத்து தொழில்புரிந்தஇந்தமாவட்டத்தில் இப்போது 466 கலன்கள் மாத்திரமே மீன்பிடிக்குப் பயன்படுத்தப்படுகிறது. 1000இற்கும் அதிகமான மீன்பிடிக் கலன்கள் அரச படைகளின் தாக்குதல்களால் அழிக்கப்பட்டுள்ளன. இப்போது பயன்பாட்டில் இருக்கின்ற கலன்களும் நீண்ட தூரங்களுக்கு பயன்படுத்தமுடியாதவாறு சேதமடைந்தவையாகவே உள்ளன. இதனால் மாவட்டத்தின் மீன்பிடி மிகவும் தாழ்வான நிலையில் காணப்படுகிறது.

1983ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த மாவட்டத்தில் இருந்து 8650 மெற்றிக்தொன் கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இது தேசிய உற்பத்தியில் 3.4% மாக இருந்தது. ஆனால இப்போது கடந்த 2002ஆம் ஆண்டு 1400 மெற்றிக்தொன்னாகவும், 2003ஆம் ஆண்டு 1760 மெற்றிக்தொன்னாகவுமே கடலுணவு உற்பத்தி காணப்படுகிறது. இது தேசிய உற்பத்தியில் 1% மாகக் காணப்படுகிறது. எனவே உற்பத்தி வீதம் 2.4% வீழ்ச்சியை அடைந்திருக்கிறது.

கடந்த பல ஆண்டு காலமாக யுத்தத்தின் சுமைக்குள் இந்த மக்களை சிங்கள அரசுகள் தள்ளியதன் காரணமாக படகுகளையும், வலைகளையும் இழந்திருக்கின்றனர். துறைசார்ந்த மேலதிக அறிவு இல்லாதவர்களாகவும் நவீனத்துவத்தன்மை அற்றவர்களாகவும் இந்த மீனவர்கள் இருக்கின்றனர்.

இத்தனை துன்ப துயரங்களுக்கு மத்தியில் தம்மிடம் இருக்கின்ற தொழில் உபகரணங்களைவைத்து தொழில் புரிகின்ற இந்த மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள இரண்டாவது பிரச்சினை இந்தியமீனவர்களின் வருகை. இந்திய மீனவர்கள் அத்துமீறி வந்து மீன்களைப் பிடிக்கின்றனர். அதுமட்டுமன்றி இந்தப்பகுதி மீனவர்களின் உபகரணங்களைச் சேதப்படுத்தியும் திருடியும் செல்கின்றனர். இதனால் பெருமளவான மீனவர்கள் நாளாந்தம் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அடுத்த படியாக யாழ்.குடாநாட்டில் உள்ள மீனவர்கள் தடைசெய்யப்பட்ட கரைவலைகளைப்பயன்படுத்தி ஆனையிறவுக்கடல் வரை அத்துமீறி வந்து மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். வெளிப்பகுதி மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடு இவர்களை மேலும் பலமாக பாதிப்படையச் செய்திருக்கிறது. இதனைக் கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கபடவில்லை.

இத்தனைக்கும் மேலாக நன்னீர் மீன்பிடித தொழிலில் சிறந்து விளங்கிய பூநகரிப் பிரதேசத்திலிருந்து (முன்னைய காலத்தில் நன்னீர் மீன்பிடிமூலம் பெருமளவான மீன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.) சிறிலங்காப்படைகளால் கைப்பற்றப்பட்டதுடன் இந்நன்னீர் மீன்பிடி சிதைக்கப்பட்டு விட்டது. இதற்கான மீன்குஞ்சுகளை 'தம்புல்ல' வில் இருந்து கொண்டுவர முடியாத சூழல் உள்ளது. இதனால் நன்னீர் மீன்பிடி முற்றாக கைவிடப்பட்டுள்ளது.

தொழில் ரீதியாக நொந்து போயுள்ள இந்த மீனவ மக்களுக்கு எந்த அரச நிறுவனங்களோ அரச சார்பற்ற நிறுவனங்களோ பெரிதாக உதவுவதற்கு முன்வரவில்லை. யூ.என்.டி.பி. நிறுவனம் மாத்திரம் ஐந்து மில்லியன் ரூபா பெறுமதியான சுழற்சி முறைக்கடன் வழங்குவதற்கு முன்வந்துள்ளதுடன் இரண்டு பாரவூர்திகளையும் வழங்கியிருக்கிறது. இந்த மக்களின் தேவை .என்பது 100% உள்ளது. ஆனால் அவர்களுக்கு யு.என்.டி.பி. வழங்கியுள்ள இந்தத் தொகை அவர்களின் தேவையில் 022% வீதத்தையே பூர்த்தி செய்கிறது. இந்த மக்களின் துயரம் இங்கே

**அ.லோகீசன்**

கடமைபுரிகின்ற அரச,அரசார்பற்ற நிறுவனங்களின் கண்களுக்குத் தெரியவில்லையா? தெரிந்திருந்தால் அவர்கள் சமாதானம் உருவாகிய மூன்று வருடகாலத்தில் ஏன் இன்னும் அதனைத் தீர்ப்பதற்கு முன்வரவில்லை. இவர்கள் விரும்பும் சமூகம் இதுதானா? எப்படி இருந்தாலும் இனியாவது இவர்களின் துயரத்தைப் போக்கி ஒரு ஆரோக்கியமான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த அனைவரும் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

உதவும் நிறுவனங்களின் செயற்பாடு அப்படியிருக்க இந்த மாவட்ட மீனவர்கள் அனைவரும் இணைந்து தமக்கான கட்டமைப்புக்களை வலுப்படுத்த் வேண்டும். மாவட்டத்தின் கடற்றொழில் திணைக்களம் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளது. திணைக்களத்திற்குரிய அதிகாரிகள் எவரும் கடந்த காலங்களில் இருந்து இற்றைவரை நியமிக்கப்படவில்லை., 83ஆம் ஆண்டின் பின்னர் இன்றுவரை கடற்றொழில் திணைக்களம் வலுவிழந்து காணப்படுகிறது. இதைவிட கடற்றொழிலாளர்களின் சங்கங்களும், சமாசங்களும் வலுவற்றதாகவே காணப்படுகின்றன. சங்கங்களை சீரான முறையில் வழிநடத்தக் கூடியவர்களை இனங்கண்டு இணைத்து தமது சமாசக்கட்டமைப்புக்களை வலுப்படுத்துவதன் மூலம் மாவட்ட மீனவர்களுக்கு உரிய தேவைகளைக் கோருவதற்கும், தமது பிரச்சினைகளைச் சரியான முறையில் தீர்ப்பதற்கும் வழி பிறக்கும். மீனவர்சங்கங்களை வலுப்படுத்துவதன் மூலம் மாவட்ட உற்பத்தியை அதிகரிக்கவும் முடியும்

## தூதரகங்களின் பாதுகாப்பிற்கு கொழும்பில் பாதுகாப்பு வலயம்

### - பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் இயங்கும் அமெரிக்கத் தூதரகத்திற்கு "அந்த்திராக்ஸ்" என சந்தேகிக்கப்படும் பவுடர் சென்ற செவ்வாய் வந்துள்ளதையடுத்து அமெரிக்கத் தூதரகம் உட்பட மேலும் சில வெளிநாட்டுத் தூதரகங்களின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்படவுள்ளதாக கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்துள்ளார். இதற்கென அட்டவணைப் படுத்தப்பட்ட திட்டமொன்றின் அடிப்படையில் நட வடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும், வெளிநாட்டுத் தூதரகங்களில் பாதுகாப்பு அதிகாரிகள் நிறுத்தப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, ஐக்கியராச்சியம், பிரான்ஸ், நோர்வே தூதரகங்களுக்கே இத்தகைய பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்படவுள்ளன.

## மீளக்குடியமர்த்தப்பட்ட வவு.கணேசபுரம் மக்கள் நெருக்கடியில்

வவுனியா கணேசபுரம் பகுதியில் மீளக் குடியமர்த்தப்பட்ட மக்கள் தற்போது பெரும் பிரச்சினைக்கு முகம்கொடுத்து வருவதாகத் தெரிவிக்கின்றனர். போதிய தொழில் வாய்ப்பு இன்மை குடிநீர்ப் பற்றாக் குறைநிவாரணம் ஒழுங்காக வழங்கப்படாமை போன்ற பிரச்சினைகள் இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். டென்மார்க் நாட்டின் அகதிகளுக்கான அமைப்பின் உதவியுடன் 112 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.(21)

## அமெ. கண்ணிவெடி அகற்றும் குழு வவுனியாவிற்கு விஜயம்

(வவுனியா)

அமெரிக்காவின் கண்ணிவெடி அகற்றும் குழுவின் பிரதிநிதிகள் கடந்த புதன்கிழமை வவுனியாவுக்கு விஜயம் மேற்கொண்டனர். இவர்கள் வவுனியா அரச அதிபர், வன்னி இராணுவத்தளபதி, வவுனியாவில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஆறு கண்ணிவெடி அகற்றும் குழுக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

ரிஷாக்கிட் மற்றும் SC ஹரிஸ் ஆகிய இருவருமே வந்தவர்களாவர். இதன் பின்னர் குடாசச்சக்கொடிய பிரதேசத்திற்குச் சென்று நிலைமைகளினை ஆராய்ந்துள்ளனர். இவர்கள் தாங்கள் எது தொடர்பாகக் கதைத்தோம் என்று தெரிவிக்காத போதும் வவுனியாவில் கண்ணிவெடிகளை அகற்றுவதில் உள்ள பிரச்சினைகளும், எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய செயல்முறைக்ள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (21)

# தமிழக மீனவர்களை சிறி கடற்படையினர் அச்சுறுத்தி மீன்களைப் பறிமுதல் செய்தனர்

## - தமிழக பொலிசாரிடம் மீனவர்கள் புகார்

(சென்னை)

இராமேஸ்வரம் அருகே இந்தியக் கடல் எல்லையில் மீன்பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்களை அச்சுறுத்தும் வகையில் இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கியால் சுட்ட பின் மீனவர்களிடமிருந்து மீன்களையும் பறிமுதல் செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்திய கடலெல்லையில் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது இவர்களை வழிமறித்த இலங்கை கடற்படையினர் வளாகத்தை நோக்கி துப்பாக்கிச் சூடும் நடத்தியுள்ளனர்.

பின்னர் இந்திய மீனவர்களின் படகுகளை சோதனையிட்ட இலங்கைக் கடற்படையினர் படகுகளிலிருந்த மீன்களை அபகரித்தும் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக தமிழக பொலிசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இச்சம்பவம் பற்றி கடலோரக் காவல்படையினரிடமும தகவல் கொடுத்துள்ளனர்.


# பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகளின் A/L பரீட்சை முடிவுகள் திருப்தியளிக்கவில்லையா?

உங்கள் பிள்ளையின் பல்கலைக்கழக அனுமதி?
உங்கள் பிள்ளையின் வேலைவாய்ப்பு?
மொத்தத்தில் உங்கள் பிள்ளையின் எதிர்காலம்?
விடை: IIS ஆல் மட்டுமே முடியும்.

ஆயிரம் ஆயிரம் மாணவர்களின் எதிர்காலத்திற்கு ஒளியூட்டிய IIS நிறுவனம் உங்கள் பிள்ளையின் எதிர்காலத்திற்கும் வழிகாட்டக் காத்திருக்கின்றது.

உங்கள் பிள்ளை கணினித்துறையில் ஒரு துறைசார் வல்லுநராக, சர்வதேச பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியாக, கௌரவமான ஒரு வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள அல்லது வெளிநாடு சென்று உயர் கல்வியைத் தொடர்வதற்கு நாம வழிகாட்டுகின்றோம்.

கவலையை விடுங்கள். மேற்படி விடயம் தொடர்பாகப் பெற்றோர்கள் மாணவர்களுக்கான மிக முக்கிய கலந்துரையாடல் ஒன்று 15.08.2004 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு IIS இன் தலைமை அலுவலகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. முற்றிலும் இலவசமான இக்கருத்தரங்கில் பங்குகொண்டு உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானியுங்கள்.

IIS என்றும் உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி.

(சி.9785)

INSTITUTE OF INFORMATICS STUDIES
'An Edexces approved training Centre'
# 100, Clock Tower Road, Jaffna.
T.P.NO: 021 222 2831/021 222 6933



வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம்

# பணிநிலை வேண்டுகை

**பதவி:-** எழுதுனர்:- 302:12

**சம்பள அளவுத்திட்டம்:-** 4250-80X10-90X10-5950
(31/99 சுற்று நிருபத்திற்கு அமைய )
இத்துடன் 58/2003 இலக்க சுற்று
நிருபத்தில் அதிகரித்த 1250/-உம் வழங்கப்படும்.

**தகைமைகள்:-** அ) கூட்டுறவுப்பணியாளரின் 13ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்குப்பதிவாளர்/ எழுதுனர் பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 14ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுனர் பதவியில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ). ஐக்கிய இராட்சியத்தின் கணக்குப்பதிவாளர் நிறுவனத்தின் நடுநிலைப் பரீட்சையில் சித்தி.

அல்லது

(இ). கூட்டுறவுப் பணியாளரின் உ யர்தரப்பயிற்சி சித்தி/ க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் சித்தி.

**வயதெல்லை:-** 18 தொடக்கம் 45 வயதிற்கு உட்பட்டவர்கள். (கூட்டுறவுச் சேவையில்உள்ளவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல)

**குறிப்பு:-** விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரிக்கப்பட்டு 27.08.2004 அன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக "தலைவர், வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம் , கிளிநொச்சி" என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கவும்.

சங்கப் பணியாளர்களாயின் சங்கத்திற்கூடாக விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

சங்க எல்லைப் பரப்பிற்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

து.சிவயோகராசா,
தலைவர்
வடமாகாண ப.தெ.வ.அ.கூ.நி. பேரிணையம்,
கண்டிவீதி,
கிளிநொச்சி.

(சி.9787)



# முக்கிய கலந்துரையாடல்

வள்ளிபுனம் கிராமத்தில் அமைந்துள்ள பாரதி சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் தங்கியிருந்து கல்விகற்கும் பிள்ளைகளின் பெற்றோர்கள் அனைவருக்கும் எதிர்வரும் 17.08.2004 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு இல்ல அலுவலகத்தில் தங்கள் பிள்ளைகள் சார்பான முக்கிய கலந்துரையாடல் இடம் பெறவிருப்பதால் அனைத்துப் பெற்றோர் களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். தனிப்பட்ட அழைப்புக்கள் எதுவும் அனுப்பப்பட மாட்டாது.

தகவல்:- இல்ல நிர்வாகம்,
வள்ளிபுனம்,
புதுக்குடியிருப்பு.

(4956)



# பதவிகள் வெற்றிடம்

## வலயக்கல்வி அலுவலகம் - கிளிநொச்சி.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகள் வெற்றிடமாகவுள்ளன. இப்பதவிகளுக்கு அப்பதவிகளுக்குரிய தகைமை உடைய கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றுபவர்களிடம் இருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை உடையவர்கள் தமக்குப் பொருத்தமான பதவியைக்குறிப்பிட்டு, தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை 27.08.2004ஆம் திகதிக்கு முன்னதாக வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு நேரிலோ அன்றி பதிவுத்தபாலிலோ அனுப்பிவைக்கவும்.

### பதவிகள்

### 1.கடமை நிறைவேற்றும் அதிபர்கள்.

I. கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி - 1AB

II. கிளி/கிளிநொச்சி மத்தியகல்லூரி - 1AB

கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரிக்கான அதிபர் பதவிக்குத் தகைமை உடைய பெண்களிடம் இருந்து மட்டுமே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*விண்ணப்பதாரிகளின் தகைமைகள்:-*

I. இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1 அல்லது 2-I அல்லது 2-II

II. இலங்கை ஆசிரியர்சேவை வகுப்பு 1 அல்லது 2-I அல்லது 2-II

### 2. கடமை நிறைவேற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் - ஆரம்பக்கல்வி

*விண்ணப்பதாரிகளின் தகைமைகள்:-*

I. ஆரம்பக்கல்வி பயிற்றப்பட்டவராக 10 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக்காலம்

அல்லது

II. பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமாதாரி ஆரம்பக்கல்வியை கற்பித்தல் முறையியல் கற்றவர் 7 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக்காலம்உடையவர்

அல்லது

III. ஆரம்பக்கல்வி கல்வியியல் கல்லூரி டிப்ளோமாதாரியாக 7 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக்காலம். அல்லது

IV. கல்விமாணிப்பட்டம் பெற்று 7 வருடம் சேவைக்காலம்.

### 3. சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள்.

1. நடனம்
2. சமூகக்கல்வி
3. சங்கீதம்
4. சித்திரம்
5. ஆங்கிலம்
6. சைவசமயம்
7. கணிதம்
8. வாழ்க்கைத் தேர்ச்சி
9. வழிகாட்டலும் ஆலோசனையும்

*விண்ணப்பதாரிகளின் தகைமைகள்:-*

1. குறிப்பிட்ட பாடத்துறையில் பயிற்றப்பட்டவர். அல்லது
2. பாடத்துறையுடன் தொடர்பான பாடத்துடன் பட்டம் பெற்ற, பட்டப்பின் கல்வி டிப்ளோமாதாரிகள்.

அல்லது

3. சம்பந்தப்பட்ட பாடம்சார் கல்வியியல் கல்லூரி டிப்ளோமாதாரிகள்.

ப.அரியரத்தினம்,
வலயக்கல்விப்பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(சி-10072)

# அரசாங்க அறிவித்தல்

## வாக்காளர் இடாப்பு திருத்தம் -2004

01. 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின்-12 (01)ஆம் பிரிவின் படி 2004ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பதிவேடுகளின் திருத்தம் ஆரம்பமாகி விட்டதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

02. தற்சமயம் நடைமுறையில் இருக்கும் வாக்காளர் பதிவேடுகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலர்களால் கீழ்க்காணும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

| பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்குவைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள் | பார்வைக்கு வைக்கப்படும் பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள் |
|---|---|
| 2.1 மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் | அரசாங்க அதிபர் அந்த மாவட்டத்துக்கு பதியும் அலுவலராயிருக்கும் அந்தந்தத் தேர்தல் மாவட்டங்களுக்கான பூரணமான வாக்காளர் பதிவேட்டுப்பிரதி. |
| 2.2 பிரதேச செயலகம்/உதவிஅரசாங்க அதிபர் அலுவலகம். | பிரதேச செயலகப்பிரிவு அடங்கிய பகுதியிலுள்ள வாக்காளர் பெயர்கள் அடங்கிய பதிவேட்டின் பாகங்கள். |
| 2.3 மாநகர/ நகர/பிரதேசசபை அலுவலகங்கள் | மாநகர சபைகள், நகரசபைகள் பிரதேசங்களினுள் வதியும் சகல வாக்காளர்களினதும் பெயர்களடங்கிய இடாப்பின் பாகங்கள் |
| 2.4 ஒவ்வொரு கிராம அலுவலர்களின் அலுவலகம். | கிராம அலுவலர் பிரிவுக்குள் இருக்கும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய இடாப்பின் பாகங்கள் |

03. ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு வாக்காளராகத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர் வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டிருக்கிறதா என்று மேலே குறிப்பிட்ட அலுவலகங்களில் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள வாக்காளர் இடாப்புக்களை பார்வையிடுவதன்மூலம் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

04 வாக்காளர் இடாப்பை அல்லது அதன் பொருத்தமான பாகத்தை பரிசீலனை செய்து தமது பெயர் அந்த இடாப்பில் பதியப்படவில்லை எனக்காணும் ஒவ்வொருவரும். 4. 1. 2004 ஆம் ஆண்டு யூன் மாதம் 01ஆம் திகதி 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினையுடைய ஒவ்வொருவரும்.

05. தத்தமது பகுதி கிராம அலுவலரிடம் 12.08.2004ஆம் திகதி தொடக்கம் 10.09.2004ஆம் திகதிவரை இவற்றுக்கான விண்ணப்பங்களை பெற்றுப் பூரணப்படுத்தி அவற்றினை மீள கிராம அலுவலரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தேர்தல் அலுவலகம்,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.
11.08.2004

உதவி பதியும் அலுவலர்
தேர்தல் மாவட்டஇல 10-யாழ்ப்பாணம்.

---

## மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஆளொருவரின் பெயரை வாக்காளர் இடாப்பில் பதிவதற்கென அந்த ஆளாலேயே செய்யப்படும் விண்ணப்பம் -2004**

................................ பிரிவு கிராம அலுவலர் ஊடாக யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம் பதியும் அலுவலருக்கு.

01.............................. ஆகிய நான் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் எனது பெயரை ஒரு வாக்காளராகப் பதிவதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

02 எனது விண்ணப்பத்தின் சார்பில் கீழ்க்காணும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

2.1 முழுப்பெயர் ..................................
2.2 விலாசம் ..........................................
2.3 பிறந்த திகதியும் வயதும் ................ (01.06.1986ஆம் திகதியும், அதற்கு முன்னர் பிறந்தவர்களும் பதிவுசெய்யத் தகுதியுடையவர்கள் என்பதைக் கருத்தில் கொள்ளவும்)
2.4 நீங்கள் இந்த வீட்டின் பிரதான குடியிருப்பாளரா?......................................
2.5 பிரதான குடியிருப்பாளருடனான உறவுமுறை ....................................
2.6 2004.06.01ஆம்திகதி மேற்குறிப்பிட்ட விலாசத்தில் சாதாரண குடியிருப்பாளரா? ............................
2.7 பால் .............................. இனம் .................
2.8 பதிவு மூலம் இலங்கைப்பிரஜையாயின் பிரஜா உரிமைப்பத்திர இலக்கத்தினைக் குறிப்பிடுக.....
2.9 தேசிய அடையாள அட்டைஇல ..................................

03. வாக்காளர் பதிவுசெய்யப்படவேண்டிய இட விபரம்

3.1 தேர்தல் மாவட்டம் இல.10 யாழ்ப்பாணம்
3.2 வாக்கெடுப்பு பிரிவு -..........................
3.3 வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம் -......................
3.4 கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் - ..................
3.5 கிராமம்/வீதியின் பெயர் - ........................
3.6 வீட்டு இலக்கம் - ...........................
3.7 மேற்குறித்த வீட்டு இலக்கத்தின் 2003ஆம் ஆண்டு வாக்காளர் பதிவேட்டில் பதியப்பட்டுள்ள பெற்றோர்/உறவினர் விபரம்

| பெயர் | தொடர் இல |
|---|---|
| 1........................................ | .................................... |
| 2. ...................................... | .................................... |
| 3. ...................................... | .................................... |
| 4........................................ | .................................... |

திகதி-2004 ........................

..................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

---

### கிராம அலுவலரின் சான்றிதழ்

குறிப்பு - 2003 ஆண்டு வாக்காளர் இடாப்பு விபரம் பின்பற்றப்படல்வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

01. தேர்தல் மாவட்டம் இல.10 யாழ்ப்பாணம்.
02.வாக்கெடுப்புப் பிரிவு .......................................
03. வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம்..........................
04. கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் ...................
05. கிராமம், வீதியின் பெயர் .....................................
06. வீட்டு இலக்கம் .......................
07. 2003ஆம் ஆண்டு பதிவேட்டின் படி இந்தப் பெயர் பதியப்படவேண்டிய பக்க இலக்கம் .......... (உதாரணம் -அ/15/24)

மேற்காட்டப்பட்ட ................. என்பவர் வாக்காளராகப் பதியப்படுவதற்கு தகுதியுடையவர். இவரின் பிறந்ததிகதி .......................... ஆகும். இந்தத்திகதி என்னால் பரிசீலிக்கப்பட்டது.

திகதி-2004...............................

..........................
கிராம அலுவலரின் ஒப்பம்
பதவி முத்திரை

---

**தனது நெருங்கிய உறவினர் ஒருவரை தமது வீட்டில் குடியிருக்கும் ஒருவரை ஒரு வாக்காளராகப் பதிவதற்கு அவரின் சார்பில் வேறு ஆளாலே செய்யப்படும் விண்ணப்பம்-2004**

அ. எவர்சார்பாக விண்ணப்பிக்கப்படுகின்றதோ அவரின்
முழுப்பெயர்.............................................. விலாசம் ..............................................

ஆ. அவரின் தேசிய வேறு அடையாள அட்டை இலக்கம்............... இ. அவர் பிரதான குடியிருப்பாளரா? ........................

ஈ. அவருக்கும் எனக்குமுள்ள உறவுமுறை ............................ உ. அவருடைய தொழிலும் தற்போதைய விலாசமும்.........................

ஊ. அவரின் பிறந்ததிகதியும் வயதும் ........................ எ. பால்- .................. இனம் - ..................

ஏ.விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ............................... ஐ. விலாசம் ........................

ஒ. வாக்காளராக பதிவுசெய்யப்படவேண்டிய இட விபரம் - ............................

01. தேர்தல் மாவட்ட இல.10 யாழ்ப்பாணம்
02 வாக்கெடுப்புப்பிரிவு ...............................
03. வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம் ......................
04. கிராம அலுவலக பிரிவும் இலக்கமும்.......................
05. கிராமம/வீதியின் பெயர் ....................................
06. வீட்டிலக்கம் - ..........................................
07.மேற் குறித்த வீட்டிலக்கத்தில் 2003ஆம் ஆண்டு வாக்காளர் பதிவேட்டில் பதியப்பட்டவர்களின் விபரம்.

| பெயர் | தொடர் இலக்கம் |
|---|---|
| 01. ................................ | ............................ |
| 02 ................................ | ............................ |
| 03................................ | ............................ |
| 04................................ | ............................ |

மேலேஉள்ள விபரங்கள் எல்லாவகையிலும் உண்மையானவை எனவும், எந்த ஆள் சார்பில் இந்த விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ அந்த ஆள் மேற்குறிப்பிட்ட தேர்தல் மாவட்டத்துக்கான வாக்காளர் ஒருவராகப் பதிவு செய்வதற்கு தகுதியுடையவர் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி- 2004 ........................

..................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

---

### கிராம அலுவலரின் சான்றிதழ்

குறிப்பு- 2003ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பு விபரம் பின்பற்றப்படல் வேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ளவும்.

01. தேர்தல் மாவட்டம் இல10 யாழ்ப்பாணம்
02. வாக்கெடுப்புப் பிரிவு - ........................................
03. வாக்கெடுப்பு மாவட்டம் இலக்கம் ............................
04. கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும்.......................
05. கிராமம்/வீதியின் பெயர் ...................................
06. வீட்டிலக்கம் ............................
07. 2003 ஆம் ஆண்டு பதிவேட்டின் படி இந்தப்பெயர் பதியப்படவேண்டிய பக்க இலக்கம் ............................................. (உதாரணம் - அ/15/24)

மேற்காட்டப்பட்ட ................................ என்பவர் வாக்காளராகப் பதியப்படுவதற்குத் தகுதியுடையவர். இவரின் பிறந்ததிகதி என்னால் பரிசீலிக்கப்பட்டது.

திகதி- 2004.........................................

..........................................
கிராமஅலுவலரின் கையொப்பம்
பதவி முத்திரை

(சி.9788)

## 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி

# தென்னாபிரிக்க அணிக்கு நெருக்கடி; சிறிலங்கா 492 ஓட்டங்கள் முன்னிலையில்



சிறிலங்கா தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெற்று வரும் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் சிறிலங்கா அணி தென்னாபிரிக்க அணியைவிட 492 ஓட்டங்களை அதிகப்படியாகப் பெற்று வலுவான நிலையில் உள்ளது.


மூன்றாம் நாளான நேற்றைய ஆட்டநேரமுடிவின் போது சிறிலங்கா அணி தனது இரண்டாவது இனிங்சிற்காக நான்கு விக்கெட்டுக்களை இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

தென்னாபிரிக்கா தனது முதல் இனிங்சில் 189 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் ஆறு துடுப்பாட்ட வீரர்கள் பத்துக்கும் குறைவான ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் ஸ்மித் 65 ஓட்டங்களையும் காஸ்ரோவெல் 51 ஓட்டங்களையும் அதிகப்படியாகப் பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் சனத்ஜெயசூரியா 34 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், ரங்கனகேரத் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

சிறிலங்கா முதல் இனிங்சில் 470 ஓட்டங்கள், சங்கக்கார 232, உப்புல் சந்தன 40, ஜெயசூரியா 43, ஜெயவர்த்தன 82 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் பொலக் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

சிறிலங்காவின் இரண்டாவது இனிங்சில் சங்கக்கார 62,



அத்தப்பத்து 74 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் கலிஸ் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

## சத்திரசிகிச்சைக்காக முரளிதரன் அவுஸ்திரேலியா பயணமானார்


இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் முரளிதரனுக்கு தோள்பட்டையில் காயம் ஏற்பட்டுள்ளது. இதற்கு சத்திரசிகிச்சை செய்வதற்காக அவர் அவுஸ்திரேலியாவுக்கு நேற்று அதிகாலை பயணமானார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் 91 டெஸ்டுகளில் விளையாடி 532 விக்கெட்டுக்களை வீழ்த்தி உலக சாதனையாளராக விளங்குகிறார்.

மேற்படி உபாதை காரணமாக தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஐந்து ஒரு நாள் போட்டியில் முரளி பங்குபற்ற மாட்டார். அத்துடன் இங்கிலாந்தில் நடைபெறும் மினிஉலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியிலும் முரளி கலந்து கொள்வதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

## ஐ.சி.சி கிரிக்கெட் கோப்பையை இந்திய அணி கைப்பற்றும்

### சிறிகாந்த்




இங்கிலாந்தில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.சி.சி. மினி உலகக் கிண்ணப் போட்டியில் இந்தியா கோப்பையைக் கைப்பற்றும் என அணியின் முன்னாள் தலைவர் சிறிகாந்த் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான் உட்பட 12 நாடுகள் பங்கேற்கும் இப் போட்டிக்கான அறிமுகம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன் போது கருத்துத் தெரிவித்த சிறிக்காந்த் இந்திய வீரர்கள் சிறப்பாக விளையாடுவதாகவும் அவ் அணியால் ஐ.சி.சி கிண்ணத்தைக் கைப்பற்ற முடியும் எனவும் கூறினார்.

இறுதிப் போட்டியில் வெற்றி பெற இந்தியா திறமையாக விளையாடும் எனவும் தெரிவித்தார்.

## சர்வதேச கால்பந்து போட்டிகளில் இருந்து பிரான்ஸ் கால்பந்து வீரர் ஜிடேன் ஓய்வு



பிரான்ஸ் கால்பந்து அணியின் முன்னணி வீரர் ஜிடேன் சர்வதேச கால் பந்து போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

ஜிடேன் ஓய்வு பிரான்ஸ் கால் பந்து ரசிகர்களை கவலையில் ஆழ்த்தியுள்ளது. அவரது ஆட்டத்தைக் காணரசிகர்கள் பட்டாளம் ஏராளம். கால்பந்து ஆட்ட கதாநாயகர்களில் ஒருவராக விளங்கிய ஜிடேன் தனது ஓய்வு பற்றித் தெரிக்கையில் "ஆட்டத்தை நிறுத்த சரியான தருணம் என்பதால் இந்த கடினமான முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

32 வயதான ஜிடேன் 93 சர்வதேசப் போட்டிகளில் ஆடியுள்ளார். அதில் 7 ஆட்டங்கள் தவிர அனைத்திலும் அவரது அணி வெற்றிபெற்றுள்ளது. 11போட்டிகளில் அணித்தலைவராக இருந்தும் உள்ளார்.

1998-ஆம்ஆண்டில் நடந்த உலகக் கோப்பை போட்டியில் ஜிடேன் தலைமையில் பிரான்ஸ் அணி கோப்பையைக் கைப்பற்றியது. அந்தஅணி இறுதி ஆட்டத்தில் பிரேசிலை வீழ்த்தியது. ஜிடேன் மொத்தம் 26 கோல்கள் அடித்துள்ளார். 2001ஆம் ஆண்டில் ஐரோப்பிய சம்பியன் பட்டம் வென்ற பிரான்ஸ் அணியிலும் அவர் ஆடினார். சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெற்றுள்ள ஜிடேன் ரியல் மாட்ரிட் அணிக்காக தொடர்ந்து ஆடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஸ்பெயினை சேர்ந்த அந்த அணியில்2007-ஆம்ஆண் வரை அவர் ஒப்பந்தமாகியுள்ளார்.

## இந்தியாவைச் சமாளிப்பது எளிதல்ல நெதர்லாந்து ஹொக்கி பயிற்சியாளர்

இந்திய வீரர்களை மிகவும் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. அவர்களைச் சமாளிப்பது எளிதான காரியமல்ல என்கிறார் நெதர்லாந்து ஹொக்கி அணியின் பயிற்சியாளர் டெரி வால்ஷ். எதென்ஸ் ஒலிம்பிக் ஹொக்கி பிரிவின் முதல் ஆட்டத்தில் இவ்விரு அணிகளும் மோதவுள்ளன. நாளை இப்போட்டி நடைபெறுகிறது. 1996, 2000 ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற நெதர்லாந்து ஹொட்ரிக் அடிக்கும் நோக்கத்துடன் களமிறங்கின்றது இதற்கு முன்பு இச்சாதனையைச் செய்த ஒரேநாடு இந்தியாதான். சமீபத்தில் நடைபெற்றநான்கு நாடுகள் போட்டியில் இந்தியாவை வென்றது நெதர்லாந்து. ஆனால் அப்போட்டியில் மிகக்கடினமான எதிர்ப்பாட்டத்தை இந்தியர்கள் வெளிப்படுத்தியதை மறக்கவில்லை என்கிறார் வால்ஷ். இந்திய அணி மிகவும் வலுவானஅணி. அவர்களைச் சமாளிப்பது எளிதல்ல. அவர்களை சாதாரணமாக எடுத்துக கொள்ளக்கூடாது என்று தன் வீரர்களுக்கும் மற்றநாடுகளையும் எச்சரித்துள்ளார் வால்ஷ். பி பிரிவில் இந்தியா மற்றும் அவுஸ்திரேலியாவைச் சமாளிப்பதுதான் எங்களுடையமுதல் இலக்கு. அதற்கு பிறகுதான் அடுத்தசுற்றுக் குறித்து நினைக்கவேண்டும் என்றார் அவர்.



எதென்சில் பல நாடுகளைச் சேர்ந்த நீர்மூழ்கும் போட்டியாளர்கள் ஒலிம்பிக் திறப்பு விழாவிற்கு முன்னர் தமது இறுதிப் பயிற்சிக்கான சந்தர்ப்பத்திற்காகக் காத்து நிற்கின்றனர்.




## ஒலிம்பிக் கால்பந்து ஆர்ஜென்டினா வெற்றி

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியின் கால்பந்து ஆட்டங்கள் தொடங்கி நடந்து வருகிறது. இதன் ஒரு ஆட்டத்தில் ஆர்ஜென்டீனா 6-0 என்ற கோல் கணக்கில் செர்பியாவைத் தோற்கடித்தது. கிரீஸ்-தென்கொரியா மோதிய ஆட்டம் 2-2 என்ற கோல் கணக்கிலும், அவுஸ்திரேலியா-துனிசியா இடையேயான ஆட்டம் 1-1 கோல் கணக்கிலும் முடிந்தன.



எதென்சில் ஒலிம்பிக் போட்டியின் திறப்பு விழா நிகழ்விற்கு சில மணித்தியாலங்களுக்கு முன் எதென்ஸ் கலற்சி மண்டபத்தில் தமது வழமையான பயிற்சியில் பிறேசிலைச் சேர்ந்த உடற்பயிற்சிக் குழுவினர் ஈடுபடுகின்றனர்.

## மாகாணமட்ட கராத்தேப் போட்டியில் முல்லை.வீரர் இருவருக்கு 2ஆம்,3ஆம் இடம்

கடந்த 05.08.2004 திருகோணமலை மாவட்டத்தில் மாகாணமட்ட கராத்தேப்போட்டி நடைபெற்றது.

முல்லை.மாவட்டத்திலிருந்து பங்குபற்றிய இரண்டு பேர் வெற்றி பெற்றனர்.

இதில் 65Kg உட்பட்ட பிரிவு குமிற்ரிப் போட்டியில் 2ஆம் இடத்தை தர்மதாஸ்-அகிலதாஸ் பெற்றுக்கொண்டார்.

55Kg உப்பட்ட பிரிவு கராத்தேப் போட்டியில் 3 ஆம் இடத்தை திருநாவுக்கரசு-பிரசன்னா பெற்றுக் கொண்டார்.

முல்லை.மாவட்டவீரர்கள் கராத்தேப் போட்டியில் சென்ற வருடமும் தங்கம், வெள்ளி,வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

## பருத்தித்துறை லீக் அணி வெற்றி

கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக் அணிக்கும் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் அணிக்கும் இடையில் கிளிநொச்சி பொது மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டியில் பருத்தித்துறை லீக் அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.


## பயிற்சிப்போட்டிகள் பளை மைதானத்தில்

மாகாண மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 21,22-08-2004 ஆகிய திகதிகளில் நடைபெறவிருப்பதால் கிளிநொச்சி மாவட்ட மெய்வல்லுநர் போட்டியில் 1 ஆம்., 2 ஆம்,3ஆம் இடங்களைப் பெற்ற பச்சிலைப்பள்ளி பளைப்பிரதேச செயலக வீர வீராங்கனைகளுக்கான பயிற்சிகள் பளை பொதுவிளையாட்டு மைதானத்தில் 16.08.2004 தொடக்கம் நடைபெறவுள்ளது. எனவே 16.08.2004 காலை 7 மணிக்கு உரிய வீரவீராங்கனைகளைத் தவறாது சமுகமளிக்கும்படி பளைப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் கேட்டுக்கொள்கின்றார்.

## ஒலிம்பிக் துளிகள்

ஒரே நாளில் 500 விமானங்களில் 75 ஆயிரம் பேர் எதென்சிற்கு வந்து சாதனை படைக்கப்பட்டுள்ளது. தாய் வீட்டுக்கே மீண்டும் திரும்பியுள்ள ஒலிம்பிக் போட்டி, பல்வேறு விதத்தில் சாதனைகளை படைத்து வருகிறது. 10,500 வீரர்கள்,5500 அதிகாரிகள், 21,500 பத்திரிகையாளர்கள் என்று மிக அதிக மக்களுக்கு ஒலிம்பிக் கிராமத்தில் இடவசதி செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்குப் பிறகு நடைபெறும் முதல் ஒலிம்பிக் என்பதால் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகவும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. தொடக்க விழாவுக்கு முன்னதாக முக்கிய மைதானத்தில் ஒத்திகை நடத்தப்பட்டது. 70 ஆயிரம் பேர் அமரக்கூடிய இருக்கை வசதியுள்ள இம் மைதானத்தில் அனைத்து இருக்கைகளிலும் உள்ளவர்கள் 17நிமிடங்களில் வெளியேறினர். எவ்வளவு விரைவாக அனைவரையும் உள்ளே அனுமதிப்பது எவ்வளவு விரைவாக அவர்கள் வெளியே செல்ல முடியும் என்ற இந்த ஒத்திகை வெற்றிகரமாக நடந்ததாகப் போட்டி அமைப்பாளர்கள் கூறினர். உலகெங்கும் கொண்டு செல்லப்பட்ட ஒலிம்பிக் ஜோதி கிரீசிக்கு புதன் கிழமை வந்து சேர்ந்தது. மார்ச் 25 ஆம்திகதி சூரியக் கதிர்களால் ஏற்றப்பட்ட ஜோதி, 26 நாடுகளில் 78 ஆயிரம் கி.மீ. பயணம் மேற்கொண்டது. 247 பிரபலங்கள் ஜோதியை ஏந்திச் சென்றனர் தற்போது கிரீசில் உள்ள 29 நகரங்களில் இது சுற்றுப் பயணம் மேற்கொண்டு தொடக்க விழாவின் போது மைதானத்துக்கு கொண்டு வரப்பட்டது. அடுத்து 17 நாள்களுக்கு தினசரி 16 ஆயிரத்துக்கும் அதிகமான வீரர்கள், அதிகாரிகள் உள்ளிட்டோருக்கு 24 மணி நேரம் உணவு வழங்கப்படவுள்ளது. இப் பணியில் 2000 பேர் ஈடுபட்டுள்ளனர்.

## சிந்தனைக்கு



எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கின்றது.

தமிழீழ தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 14-08-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@ eezhanatham .com
natham 2 3ela @Yanoo.com

## மீண்டும் திருமலை விவகாரம்!

திருமலைத்துறைமுகத்திற்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. திருமலைத்துறைமுகத்தைச் சூழ புலிகளின் படையணிகள் குவிக்கப்பட்டுள்ளன என மீண்டும் சனாதிபதி சந்திரிகா தரப்பினர் குரல் எழுப்பத்தொடங்கியுள்ளனர். இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

சனாதிபதி சந்திரிகா தரப்பின் இக்குற்றச்சாட்டை உறுதி செய்வதுபோன்று அங்கு எவையும் இடம் பெற்றதாகத் தகவல் இல்லை. அதாவது விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அப்பால் சென்று முகாம்களை அமைத்ததாகவோ அன்றி போர்த்தளபாடங்கள், அன்றி ஆளணிகளை நகர்த்தியதாகவோ தகவல் இல்லை.

இதற்கு அப்பால் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கூட அவ்வாறு படைக் குவிப்போ அன்றி ஆயுதத்தளபாடக் குவிப்போ இடம்பெற்றதாக இல்லை. ஆனால் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் அவ்வாறு ஏதும் இடம்பெற்றால் கூட அது போர்நிறுத்த உடன்பாட்டை மீறுவதாகவோ அன்றி யுத்தம் ஒன்றிற்குத் தயார் செய்வதாகவோ அர்த்தப்படாது. அவ்வாறு அர்த்தப்படுத்தப் படுமானால் சிறிலங்கா இராணுவம் முன்னணி நிலைகளுக்கு அண்மையாக நாளாந்தம் மேற்கொள்ளும் ஆளணிக்குவிப்பு பயிற்சி என்பன யுத்தநிறுத்த மீறல் என்ற ரீதியில் அல்லவா நோக்கப்படுதல் வேண்டும்.?

இந்நிலையில், திரும்லைத்துறைமுகத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாக சிறிலங்கா அரச தரப்பு–குறிப்பாகச் சனாதிபதி தரப்பு–குற்றச்சாட்டை எழுப்புவதானது அரசியல் தேவைகளுக்கானதே ஆகும். அவ்வாறு இல்லாவிடில் ஐ.ம.சு. முன்னணி பதவிஏற்றவுடனேயே இவ்விவகாரத்தைக் கையில் எடுத்திருத்தல் வேண்டும்.

அதாவது கடந்த முறை பாராளுமன்றக் கலைப்பிற்கு முன்பதாக சனாதிபதி சந்திரிகாவும், அவரது தரப்பினரும் திருமலைத்துறைமுகத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்ற பிரச்சாரத்தின் ஊடாகவே ஐ.தே.முன்னணி அரசாங்கத்திடம் இருந்து பாதுகாப்பு அமைச்சைப் பறிக்கவும், பின்னர் அரசாங்கத்தைக் கலைக்கவும் வழிதேடிக்கொண்டனர். இதுவே சமாதானப் பேச்சுவார்த்தைக்கும் முட்டுக்கட்டையாக அமைந்தது. இந்தவகையில், தற்பொழுதும் ஒரு அரசியல் மாற்றத்திற்கு வழிதேடும் வகையில் சனாதிபதி தரப்பு இவ்விவகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டுள்ளது போல் தெரிகின்றது. கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு–அம்பாறைப் பகுதியில் கருணாவை வைத்து அரசியல் நடத்த சனாதிபதி தரப்பு எடுத்துக்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவுற்ற நிலையில் மீண்டும் திருமலைத்துறைமுகத்தை வைத்து அரசியல் நடாத்த சனாதிபதி சந்திரிகா முற்படுவதாகவே எண்ணவைக்கின்றது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பானதொரு உறுதியான முடிவை வெளிப்படுத்த் வேண்டியதானதொரு நிலையில் இருக்கின்றது. இதன் காரணமாகவே விடுதலைப்புலிகளுடன் தன்னாட்சி இடைக்கால அதிகாரசபை தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்ததான் தயாராக இருப்பதாகச் சனாதிபதி சந்திரிகா தெரிவிக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முக்கிய பங்காளிகளான ஜே.வி.பி யினர்–இவர்கள் தாங்களே ஆட்சியாளர்கள் எனவும் கூறிக்கொள்வதுண்டு. சனாதிபதியின் இந்நிலைப்பாட்டிற்கு ஆதரவாக இல்லை. பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டால் அரசாங்கத்தைவிட்டு வெளியேறிவிடுவோம் என்பது அவர்களின் எச்சரிக்கையாகவுள்ளது.

இந்நிலையில், சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுதல் தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுதல் போன்றதொரு தோற்றப்பாடும்–அதேசமயம் பேச்சுவார்த்தை மேசைக்கு செல்லாதவகையிலான நடவடிக்கைகளும் தேவையானதாகவுள்ளது. மறுவளமாகக் கூறினால் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கமுடியாததொரு சூழ்நிலையை உருவாக்குதல், அதுவும் விடுதலைப்புலிகள் தரப்பில் இருந்து தோற்றுவித்தல் வேண்டும்.

இதுமட்டுமல்ல, திருமலை மாவட்டத்தில் முஸ்லீம் மக்களுடனான உறவை மேம்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளை அண்மைக் காலத்தில் விடுதலைப்புலிகள் மேற்கொண்டுள்ள தோடு, நிலைமையும் சுமுகமானதொரு நிலைக்குக்கொண்டு வருவதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளனர். அதிலும் குறிப்பாகக் கடந்தமுறை சிறிலங்கா அரசு பயன்படுத்திய குரங்குபாஞ்சான் விவகாரம் சுமுகமான தீர்வொன்றை எட்டியுள்ளது. இது ஆட்சியாளர்களைப் பொறுத்து விரும்பத்தக்கதொன்றல்ல.

இந்நிலையில் தான், மீண்டும் திருமலை விவகாரத்தை அரசாங்கம் கையில் எடுத்துக்கொண்டுள்ளது. ஆனால் இவ்விவகாரத்தைக் கடந்த முறை பயன்படுத்திக்கொண்டது போல் அமைச்சுக்கள் பறிப்பிற்கோ அன்றி பாராளுமன்றக் கலைப்பிற்கோ பயன் படுத்திக்கொள்ள வாய்ப்பில்லை. ஏனெனில் அவை அவர்களிடமே உள்ளன. ஆனால், கடந்த முறை போல் சமாதானப் பேச்சு வார்த்தைகளைப் பின்தள்ள இதனை உபயோகப்படுத்தலாம். அதேவேளை கடந்தமுறைக்கு எதிர்மறையாக அரசாங்கத்தைக் கவிழவிடாமல். பாதுகாத்துக் கொள்ளப்பயன்படுத்தலாம்.

### தங்காலைப் பகுதியில்

# மரணவீட்டுக்குள் புகுந்து துப்பாக்கிச் சூடு

# இறந்தவரின் 4 சகோதர சகோதரிகள் பலி

(கொழும்பு)

தங்காலை விதாரந் தெரியவில் மரணவீடொன்றினுள் நுழைந்த ஆயுததாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நான்கு பேர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் நடந்த இந்தக் கோரச் சம்பவத்தில் மூன்று நாட்களுக்கு முன்னர் சுட்டுக்கொல்லப்பட்ட ஒருவரின் மரண வீட்டிலேயே நடந்துள்ளதாக தங்காலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. சுகததாஸ தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலைகளை இராணுவ உடையை ஒத்த சீருடை அணிந்த எட்டுப்பேர் நடத்தியதாகவும்

தாக்குதலுக்கு ரி.56 ரகத்துப்பாக்கி பயன்படுத்தப் பட்டுள்ளதாகவும் அதேவேளை இனங்காணப்படாத அதிசக்தி வாய்ந்த துப்பாக்கிகளும் பயன் படுத்தப் பட்டதாகவும் பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித் துள்ளார்.

இதேவேளை இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் ஏற்கனவே மூன்றுநாட்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்டவரது இரு சகோதரர்களும் இரு சகோதரிகளும் எனவும் தெரிவிக்கப் படுகின்றது. இதேவேளை துப்பாக்கிச்சூடு நடத்தியோர் இறுதிக்கிரியைகளுக்கு தயார் நிலையிலிருந்த சடலத்தின் மீதும் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். (32)

# கொலன்னாவவில் எண்ணெய் விநியோகம் தடை

# எண்ணெய் நிரப்பு நிலையங்களில் நெருக்கடி

கொழும்பு கொலன்னாவ கிளையில் எண்ணெய் விநியோக நடவடிக்கைகள் நேற்று தடைப் பட்டிருந்ததைத் தொடர்ந்து அங்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பாரிய நெருக்கடி நிலை எழுந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து எரிபொருள் நிரப்பு நிலையங்களில் போதியளவு எரிபொருள் இருக் கின்றது. இதனால் மக்கள் அஞ்சத் தேவையில்லையென அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கொலன்னா கிளை ஊழியர்களின் மத்தியில் நேற்று குழப்ப நிலை தோன்றியுள்ளது. இதனால் நேற்று எண்ணெய் விநியோகம் தடைபட்டது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் குறிப்பிட்ட ஒரு கிளையை வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிற்கு கையளிப்பதற்கு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலை அடுத்தே இந்த குழப்ப நிலை தோன்றியுள்ளதாக தொழிற் சங்க கூட்டமைப்பின் பேச்சாளர் ஜகத் விஜய குணரட்ண தெரிவிததார். இதன் காரணமாக எரிபொருள் விநியோகம் தடைப்படலாம் என்றும் அவர் மேலும் கூறினார். இந்த நிலை குறித்து ஆராயும் பொருட்டு மின்சக்தி எரிசக்தி பிரதியமைச்சர் குமார அல்கம, பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைவர் ஆகியோர் கொலன்னாவ எண்ணெய் தாங்கி நிலையத்துக்கு தற்போது சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்த உடன்படிக்கை தொடர்பாக பிரதியமைச்சரிடமும் பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைவரிடமும் கேட்ட போது, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எந்தவொரு கிளையையும் எந்தவொரு நிறுவனத்திற்கும் கையளிக்கும் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை என்று கூறினர்.

### -தேசியப்பட்டியல் பா.உ.நியமனம்-

# தனக்கு எதிரான மனுவுக்கு எதிராக

# ரட்ணசிறி விக்கிரமநாயக்க மனு

(கொழும்பு)

அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஐக்கிய மக்கள் தேசிய முன்னணியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராகத் தன்னை நியமனம் செய்தது சட்ட விரோதமானது எனக்கோரி மாற்றுக் கொள்கைகள் நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவிற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் எதிர்மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

அவர் தாக்கல் செய்துள்ள இந்த எதிர்மனுவில் தனக்கு எதிராகச் செய்யப்பட்ட மனுவை நிராகரிக்குமாறு அதில் கேட்டுள்ளார்.

இதேவேளை அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவிற்கு எதிராக மாற்றுக் கொள்கைகள் நிறுவனத்தைச் சேர்ந்த எதிரிசிங்க தாக்கல் செய்திருந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென யூலை மாதம் ஏழாம் திகதி மேல் முறையீட்டு நீதிமன்றம் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அரசசாசன சரத்தின் படி இந்த மனுவை விசாரணை செய்யும் அதிகாரம் உச்சநீதிமன்றத்திற்குக் கிடையாது என ரட்ணசிறி விக்கிரமநாயக்க தனது மனுவில் தெரிவித் துள்ளார்.

எனவே மேல்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை விசாரணைக்கு எடுக்காமல் நிராகரிக்குமாறு அவர் தனது மனுவில் கேட்டுள்ளார்.

# இலங்கைக்கான அமெ.தூதரகம் திங்களன்று மீண்டும் திறக்கப்படும்

### தூதரகப் பேச்சாளர் தெரிவிப்பு

பாதுகாப்பு தொடர்பான அச்சுறுத்தல் காரணமாக மூடப்பட்டிருக்கும் இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் திங்கட்கிழமை மீண்டும் திறக்கப்படவுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்கத் தூதரகத்திற்கு ஒருவகைத்தூள் கடிதத்தில் அனுபபப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து தூதரகம் மூடப்பட்டுள்ளமை தெரிந்ததே. இதில் அந்திராக்ஸ் நுண்ணுயிர் இருக்கலாம் என்ற அச்சம் எழுந்தது. ஆனால் அவ்வாறு ஒன்றும் இல்லையென சோதனைகளின் மூலம் தெரியவந்துள்ளது. இதேவேளை வெள்ளைத்தூள் விஷத்தன்மை யானதல்ல என தூதரகத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# வேலையற்ற பட்டதாரிகள் அனைவருக்கும் நிச்சயம் வேலை வாய்ப்பு வழங்கப்படும்

### சிறில.சனாதிபதி அறிவிப்பு


வேலையற்ற சகல பட்டதாரிகளுக்கும் நிச்சயம் வேலை வாய்ப்பு வழங்கப்படுமென சனாதிபதி உறுதியளித்துள்ளார்.

அரச துறையின் உற்பத்தி துறைகளில் பல வெற்றிடங்கள் இருப்பது இனங்காணப்பட்டுள்ளது. வேலையற்ற சகல பட்டதாரிகளும் இப்பதவிகளுக்கு நியமிக்கப்படுவார்களென சனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதென்ற அரசின் திட்டம் குறித்து பலர் நன்கு அறியவில்லையென அவ்அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# ஒலிம்பிக் ஆரம்ப நிகழ்வில்...







# குடியிருப்பாளர் விபரம்கோரும்படிவம் கொழும்பில் பொலிசாரால் விநியோகம்

### பதிவு மேற்கொள்ளத் தேவையில்லை என்கிறார் பொலிஸ் மா அதிபர்

கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதிகளில் பொலிசார் தமிழர்கள் மத்தியில் மீண்டும் பதிவு விண்ணப்பங்களை விநியோகித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. முன்னர் இருந்த நடைமுறை போன்று இதில் தமிழர்கள் தமது வீடுக ளில் இருப்போரின் விபரங்களை வெளியிடக்கோரப்பட்டுள்ளது.

இந்த நிலையில் விடயம் தொடர்பாக பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வாவிடம் வினவியது. இவ்வாறான எந்த ஒரு உத்தரவும் தம்மால் விடுக்கப்படவில்லை எனக் கூறிய அவர், அவசர கால நிலை அமுல் செய்யப்பட்டிருந்தால் மாத்திரமே இவ்வாறான நடைமுறையை பொலிசார் பின்பற்ற முடியும் எனவும் தெரிவித்தார்.

எனவே தமிழ் மக்கள் குறிப்பிட்ட நடைமுறையை கடைப்பிடிக்கத் தேவையில்லை எனவும் அவர் கூறினார். (32)

# போலிச் சுட்டுத்துண்டு பொறிக்கப்பெற்ற மென்பானங்கள் விற்பனை

(அலுவலக செய்தியாளர்)

தென்னிலங்கையில் உற்பத்தி செய்யப்பெற்று போலி சுட்டுத் துண்டு(லேபல்)பொறிக்கப்பெற்ற மென் பானங்கள் (சோடா 1.5 லீற்றர்) கிளி.முல்லை மாவட்ட வியாபார நிலையங்களில் விற்பனை செய் யப்பெற்றுவருகின்றமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

போலியான சுட்டுத்துண்டுடைய மனித நுகர்விற்கான உணவுப் பொருட்கள் விற்பனை செய்யபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இவ் விடயத்தில் நுகர்வோர் விழிப்புடன் இருக்குமாறு தமிழீழ சுகாதார சேவையினர் வேண்டியுள்ளனர். (சோ,கு)

# வட்டக்கச்சியில் நபரொருவர் மர்மமான முறையில் மரணம்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி - ஐயனார் கோயிலடியில் மர்மமான முறையில் நேற்று முன்தினமிரவு நபரொருவர் உயிரிழந்துள்ளார். தங்கரர்சா - பாலசிங்கம் (வயது-45) என்ற நபர் சம்பவதினம் வேறொரு வீட்டில் படுத்திருந்த சமயம் உயிரிழந்தார்.

இது தொடர்பான விசாரணைகளை ஸ்தலத்திற்கு சென்ற கிளிநொச்சி மாவட்ட நீதியாளர் சாதனா மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உரியவர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

தொடர்ந்தும் மேலதிக விசாரணைகளை வட்டக்கச்சி காவல் பணிமனைப்பொறுப்பாளர் சுந்தர் தலைமையில் நடைபெற்று வருகின்றது. (15)


# உப்பள ஊழியர் கைதை எதிர்த்து மன்னாரில் கூ.ச.ஊழியர் போராட்டம்

மன்னாரில் நேற்று மன்னார் ப.நோ.கூ.ச. அனைத்து ஊழியர்களும் வேலைக்குச் செல்லாது காலை 8.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை ஒரு அடையாளவேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். கடந்தவாரம் மன்னார் உப்பளத்தில் உப்பு அள்ளிக் கொண்டிருந்த ஊழியர்கள் இருவரை தக்ககாரணமின்றி பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு தற்சமயம் விளக்கமறியலில் வைத்திருப்பதைக் கண்டித்து இந்த வேலை நிறுத்தம் செய்யப்பட்டது.

இதேசமயம் காலை 10.00 மணிக்கு அனைத்து ஊழியர்களும் மௌனமாக ஊர்வலமாக வந்து மன்னார் அரசாங்க அதிபரிடம் இவர்களது கைதைக் கண்டித்தும் இவர்களை உடனடியாக விடுதலைசெய்யுமாறு வேண்டி ஒரு மகஜர் ஒன்றினைக் கையளித்தார்கள். (மி)

# மாங்குளத்தில் திலீபன் மருத்துவ சேவையில் வெளிநாட்டு மருத்துவர்கள் சிகிச்சை

கிளிநொச்சியில் அமைந்துள்ள நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை மாங்குளம் நிலையத்தில் நேற்று முன்தினம் காலை 10.00 மணி முதல் பிற்பகல் வரை விசேட மருத்துவ முகாம் ஒன்று இடம்பெற்றது.



இம் மருத்துவ முகாமில் ஐக்கிய இராச்சியத்திலிருந்து வருகை தந்த வைத்தியர் கௌரிபாலன், அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்த வைத்தியர் திருமதி காந்திதேவி கணபதிப்பிள்ளை, கனடாவிலிருந்து வருகை தந்திருந்த வைத்தியர் றெனொல்ட் டிலினி, தாதி சிவானந்தம் வித்தியா ஆகியோர் சிகிச்சையளித்தனர். இச் சிகிச்சையில் பொது மருத்துவம், பற்சிகிச்சை என பல்வேறுபட்ட சிகிச்சைகளும் இடம்பெற்றன. இச் சிகிச்சையில் 175இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் கலந்து பயன் பெற்றனர்.

## எதிர்க்கட்சி...

நோக்கிலேயே இவ்அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என அவ் இணையதளச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

சனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு விவகாரத்தில் ஐ.ம.சு. முன்னணி அரசால் எதனையும் சாதிக்க முடியாது என்ற நிலையிலேயே சனாதிபதி சந்திரிகா எதிர்க்கட்சித் தலைவரின் உதவியை நாடியிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.இதேவேளை, சனாதிபதி சந்திரிகாவின் இந்நடவடிக்கையானது அரசியல் வட்டாரத்தில் பெரும் அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கும் என எதிர்பார்த்த நிலையில் சனாதிபதி ஆட்சி முறையை மாற்றும் விடயத்தில் சனாதிபதி அக்கறை கொண்டுள்ளமையானது அவர் நாட்டின் நலனை விட தனது சொந்த நலனில் அக்கறைகொண்டுள்ளதையே வெளிப்படுத்துவதாக இந்நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

## பணிக்கு...

தொடர்பாக துணை வேந்தர் உரிய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் மீண்டும் போராட்டத்தில் குதிக்கப்போவதாகவும் வவுனியா வளாகத்தில் கல்வி சாரா ஊழியர்கள் துணைவேந்தருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## பாராளு...

கட்டாயமாக்க வேண்டுமென நேற்று முன்தினம் கூட்டத்தில் தெரிவித்த ஆளும் கட்சியினர், அது தொடர்பில் எதிர்வரும் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்த வேண்டுமென தெரிவித்தனர்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி இது சம்பந்தமாக தமது கட்சி உறுப்பினர்களை தெளிவுப்படுத்த காலம் போதாது என்பதால் விவாதத்தை தாமதித்து பிறிதொரு திகதியில் நடத்த வேண்டுமென கோரினர். அதற்கு ஆளும் தரப்பு இணங்க மறுத்தமையை அடுத்தே இரு தரப்பிற்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இருந்து இடையில் வெளியேறினர்..இந்த நிலையிலேயே ஒரு வார பாராளுமன்ற பகிஷ்கரிப்பு குறித்து ஐக்கிய தேசியக் கட்சி ஆலோசனை செய்துள்ளது.

பெரும்பாலும் அது தொடர்பான முடிவு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற அமர்வுகள் நடைபெற்ற பின்னர் எடுக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது. (32)

## வவு...

தலைமையிலான பொலிஸ் குழுவினர் சென்றனர் சிதம்பரபுரம் பகுதியில் புதையல் இருப்பதாகக் கூறி ஏற்கனவே இதனை எடுப்பதற்குச் சிலர் முயற்சி செய்திருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (21)

## கிரான்...

பான மேலதிக விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## புளியங்குளம்...

சென்றடைந்தார். இவரிடம் வவுனியாவில் வைத்து ஏன் வன்னிப் பகுதிக்குச் சென்றீர்கள் என்று கேட்டபோது இன்றைய சமாதானச் சூழ் நிலையைப் பார்ப்பதற்காகத் தான் சென்றதாகவும் எனினும் இன்றைய சமாதானமானது உரிய முறையில் இல்லை என்று அவர் தெரிவித்தார். தான் விடுதல்லப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றபோது தான் இராணுவ சிப்பாய் என்று அறிந்த விடுதலைப்புலிகள் தன்னைக் கைது செய்து ஒரு சிறைக்கைதி போன்று பார்க்காது மிகவும் மனிதாபிமான முறையில் கவனித்ததாகவும் அவர் தெரிவித்தார். கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் தான் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றதாகவும் அங்கு சென்று மிகவும் சந்தோஷமாக இருந்ததாகவும் தெரிவித்தார். இது தொடர்பாக அந்த சிப்பாயின் தாயாரிடம் கேட்டபோது தனது மகன் சற்று சுகயீனமானவர் என்றும் இராணுவத்தில் இருந்து விலகியபின்னர் மகன் காணாமற் போனதாகவும் இவரைத்தான் தேடி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் முறையிட்டதாகவும் அவர்கள் தனது மகன் விடுதலைப் புலிகளிடம் இருப்பதாகக் கூறியதாகவும் தெரிவித்தார்.

இதன்பின்னர் கடந்த மூன்று நர்ட்களுக்கு முன்னர் வன்னிப்பகுதிக்குச் சென்று தனது மகனைப் பார்த்து அழைத்து வந்ததாகத் தெரிவித்தார். (21)

## மரண...

மரணவீடொன்றிற்கு சென்றுவிட்டு துவிச்சக்கர வண்டியில் இவர் வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளையில், மணல் ஏற்றிவந்த லொறி ஒன்றினால் மோதப்பட்டு இவர் உயிரிழந்துள்ளார்.

நண்பகல் வேளையில் மந்திகைதெரு மூடி மடத்தடிப் பகுதியில் இடம்பெற்ற இவ் விபத்தில் லொறியின் சக்கரம் இறந்த நபரின் மேலாய் முற்றாக ஏற்றியுள்ளது.

சடலம் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது.

இதனிடையே லொறியின் சாரதி நெல்லியடிப் பொலிஸில் சரணடைந்துள்ளார். (27,33)

## பொருட்க...

அரசு செயற்படுத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதனால் எமது நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய சகல பொருட்களுக்குமான நிவாரணங்களை நீக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற கிராமிய அபிவிருத்தி தொடர்பான செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை அனைத்துப் பொருட்களின் விலைகளையும் அதிகரித்து பொது மக்களை விரக்தி நிலைக்கு உள்ளாக்குவதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லையென இடது சாரி முன்னணியின் பொதுச்செயலாளர் வாசுதேவநாணயகார கூறியுள்ளார். இவ் அரசாங்கம் ஆட்சிக்கு வந்த வேளை ஐ.தே.கட்சி உலக வர்த்தக சந்தையில் தடைகளை ஏற்படுத்தியுள்ளது. அதனால் விலைகள் அதிகரிக்கின்ற போது எமது நாட்டிலும் விலைகள் அதிகரித்ததாக கூறிய உலக சந்தையில் விலை அதிகரிக்கும் போது இலங்கையிலும் விலையை அதிகரிக்க அரசாங்கம் ஒன்று தேவையில்லை எனவும் அரசாங்கம் என்பது இலாபம் ஈட்டும் நிறுவனம் அல்ல நிவாரணங்களை வழங்கும் ஓர் அமைப்பு இப் போலித்தன்மை இப்போது வெளியாகியுள்ளன எனவும் நாம் இந் நடவடிக்கையை கண்டிக்கிறோம் எனவும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 14 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.